*The Samskrit Language Diffusion Series.*

# THE

# Samskrit-Tamil Manjari

## No. 1.

## ॥ संस्कृत-तामिलमञ्जरी ॥

## ஸம்ஸ்க்ருத - தமிழ் மஞ்ஜரி.

இப்பரதகண்டத்தில் வாஸம் செய்யும் ஸ்திரீ, புருஷர்கள்,
குழந்தைகளுக்கும் ஸம்ஸ்கிருதபாஷை படிக்க விரும்பும்
ஒவ்வொருவருக்கும் உபயோகப்பட இயற்றப்பட்டது.

Printed by Rev. Br. Joseph, s.j., Supdt.,
St. Joseph's Industrial School Press, Trichinopoly.

1916.

அணா 6. *All Rights Reserved.* தபாற்கூலி வேறு.

P15-3I:4K.
N16.
184643

# Introduction.

IT has long been apparent to every one interested in the cause of Samskrit culture that, in spite of the efforts made by Samskritists and lovers of Samskrit to promote the study of the ancient classic, the number of its votaries has been rapidly dwindling. The *indigenous* Village schools have almost disappeared: and in villages, which once teemed with Samskritists and in which ignorance of Samskrit was reckoned as well-nigh verging upon illiteracy, there are now barely half-a-dozen persons who can construe an *Anushtup* verse. Sad indeed, but the fact remains. The *step-motherly* regard, which most of the Indian Universities and the Government Educational Departments have been according to Samskrit teaching in Schools and Colleges, are accelerating its decay: and that sad time, when this noble language—in which are enshrined the Religion, Philosophy, Literature and all that is dear to every Hindu—bids fair to pass from its present stage of *'dead'*, into the category of the *forgotten*, languages of the world, appears to be fast approaching. It is, therefore, the duty of every Hindu, and every lover of Samskrit, to do all he can to promote its study. The genius for Samskrit courses in the veins of every true Hindu: and all that is necessary is only an external stimulus to quicken it. This is an humble attempt in that direction.

The book comprises *three* parts. The *First* part contains the *Nagari Alphabet*, with corresponding equivalents in Tamil, suitably transcribed to represent *all* the Samskrit sounds (primary and compound). The *Second* part contains a fairly good collection of *Simple sentences* graduated according to difficulty and embodying some grammatical form or other. The *Third* part contains 16 *Simple stories* which in all ages and in all lands have captivated young minds.

The *plan* of the work has been a novel one but has been found by actual experience to be most suitable to beginners. The *empirical* mode has been adopted: and the student has been given facilities to assimilate the *language*, leaving the study of *grammar* to a later stage.

The *Stories* have been carefully selected from the several well-known Readers in use in the various parts of this country: and to the authors thereof, the Editor's thanks are due. For the purpose of adapting them to the particular mode herein followed, certain *alterations* have been made. *Compound words* have been broken up. *Simpler words* have been substituted. *Long Sentences* have been divided. *Words* have been allowed to retain their naked grammatical forms, and the rules of *Sandhi* (symphony) have been-

suspended. *Re-arrangement* of words has in many cases been effected to facilitate translation into the Vernacular, though the same has to some extent entailed the sacrifice of the Samskrit idiom.

The *Translation* has been literal and the phraseology of the Pandit has been followed so far as practicable. Where the *literal* rendering of a word has been found to be unsuitable or inappropriate at any particular place, the appropriate meaning has been given in the first instanse and the *literal* meaning enclosed in rectangular [ ] brackets. Where, for the purpose of *construing*, two or more words have to be taken together, the same have been enclosed in ordinary ( ) brackets.

This volume is the *first* of a series of graduated Readers that have been designed. It is further proposed to issue editions in *other scripts* also so far as the Samskrit language is concerned : and also in all the other Vernaculars of India. An *Anglo-Samskrit* edition will soon follow.

The *sole object* of this publication being the re-juvenation of the Samskrit learning in all its departments, the series will be issued at cost-price.

The Editor's thanks are due to Pandit Krishna Deekshita of the Hindu Secondary School and to Mr. K. Srinivasa Aiyar of the St Joseph's Industrial School Press for their very valuable suggestions and for their carefulness in passing the sheets through the Press.

In conclusion, it is hoped that every inhabitant of *Bharata-Varsha*—man, woman and child—who desires to study this classical language will find an *easy* way thereto. The help and co-operation of every Indian *pater-familias* is earnestly invoked to introduce it into his home, every *Manager* into his school, every *Matron* to her daughters and daughters-in-law, so that the *rising generation* may take more largely to Samskrit, and in the years to come there shall not be a single Indian—at any rate, not a single *Hindu*—who does not know the language of his sacred books.

*Trichinopoly,*
*1-3-1916.*

K. S. SAMBASIVA ARYA.

# முகவுரை.

**ஸம்ஸ்கிருதக்** கல்வியின் அபிவிருத்திக்காக ஸம்ஸ்கிருத பாஷாபிமானி களால் பலவிதமான முயற்சிகள் நெடுநாளாகச் செய்யப்பட்டும் அந்த திவ்ய பாஷையானது நாளுக்கு நாள் க்ஷீணித்துக்கொண்டேயிருக்கிற தென்பது யாவருக்கும் நன்ருய்த் தெரிந்த விஷயம். கிராமாந்திர பாடசாலை களோ அனேகமாக இல்லாமற் போய்விட்டன. முற்காலங்களில் ஸம்ஸ்கிருத பாஷையில் தேர்ச்சியில்லாமலிருந்தால், கேவலம் மூடத்துவம் என்று எண்ணி நூற்றுக்கணக்கான வித்தியார்த்திகள் தர்க்கம், வ்யாகரணம், மீமாம்சை, வேதாந்தம் முதலிய சகல சாஸ்திரங்களில் வல்லவர்களாய் எந்தெந்த ஊர்களி லிருந்தார்களோ அந்த ஊர்களில் இப்பொழுது கேவலம் ஒரு **அனுஷ்டுப்** ஸ்லோகத்தின் அர்த்தம் சொல்லக்கூடியவர்கள் அகப்படுவதுகூட அரிதாயி ருக்கிறது. இது மிகவும் வருந்தக்கூடியதாகவிருக்கிறது. என்ருலும் இது உண்மையே. இந்தியாவிலுள்ள மகா கலாசாலைகளின் அதிகாரிகளிலும், கவர்ன் மெண்டு கல்வி டிப்பார்ட்மெண்டு உத்தியோகஸ்தர்களிலும், அனேகர் இப் பொழுது நமது ஸம்ஸ்கிருத பாஷையை **மாற்றுந்தாய்** போல ஆதரித்து வரு கிருர்கள். தாய் பாஷையைக்கூட மாணுக்கர்களை படிக்கும்படி கட்டாயம் செய்யாத கல்விரக்ஷகர்களிடமிருந்து ஸம்ஸ்கிருத பாஷையைப்பற்றி எவ்வளவு கவனம் நாம் எதிர்பார்க்கலாம்! இப்பொழுது நமது ஸம்ஸ்கிருத பாஷை, பேசும் பாஷையாயில்லாவிட்டாலும், படிக்கக்கூடிய பாஷையாக இருக்கிறது. சில காலத்திற்குள் ஸம்ஸ்கிருதம் என்று ஒரு பாஷை பூலோகத்தில் எந்தக் காலத்திலாவது வழங்கிற்று என்னும் சந்தேகத்துக்கே இடம் கொடுக்கும் போல் தோன்றுகிறது. ஆகையால் பாஷாபிமானிகள் எல்லோரும் தங்கள் தங்களால் இயன்ற அளவு பாஷாபிவிருத்தி செய்யப் பிரயத்தனம் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஸம்ஸ்கிருத பாஷையின் வாசனையானது ஒவ்வொரு ஹிந்துவினுடைய தேகத்தில் இப்பொழுதும் இருந்து வருகிறது. இதுவரையில் ஆவியாய்ப் பறந்துபோய்விடவில்லை. ஆகையால் நாம் இப் பொழுது செய்யவேண்டியதென்னவென்ருல், அவ்வாசனையை அதிகப்படுத்த வேண்டியதே ஒழிய வேறில்லை. இந்த புஸ்தகம் அக்கருத்துடன்தான் எழுதப் பட்டிருக்கிறது.

இப்புஸ்தகம் **3 பாகங்களாகப்** பிரிக்கப்பட்டிருக்கிறது. **முதல்** பாகத் தில் பாஷையின் **அக்ஷர வரியும்**, ஒவ்வொரு எழுத்துக்கும் சரியான தமிழ் எழுத்தும் அடங்கியிருக்கின்றன. **இரண்டாவது** பாகத்தில் **சுலபமான வாக்கியங்களில்** ஆரம்பித்து படிப்படியாக கடினமான வாக்கியங்களுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறது. **மூன்றவது** பாகத்தில் எல்லாக் காலங்களி லும் சகல தேசங்களிலும் சிறுவர் சிறுமிகள் மனதைக் கவரக்கூடிய **சிறிய கதைகள்** எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தப் புஸ்தகம் நூதனமான ஒரு நடையில் எழுதப்பட்டிருந்தபோதி லும் அனுபவத்தில் இதுதான் மிகவும் தகுதியானதென்று காணப்படுகிறது. எளிதில் பாஷைத் தேர்ச்சியையடைய வேண்டியதற்காக, **இலக்கண** ஆராய்ச்சியைப் பின்னுல் அடைந்துகொள்ளலாம் என்று நிச்சயித்து, ஸம்ஸ்கிருத பதங்களையும் அவைகளின் அர்த்தங்களையும் மாத்திரம் படிக்கும்படி எழு தப்பட்டிருக்கிறது.

இப்புஸ்தகத்தில் அடங்கியிருக்கும் கதைகள் இந்த நாட்டின் அனேக பாகங்களில் உபயோகிக்கும் ஸம்ஸ்கிருத வாசக புஸ்தகங்களிலிருந்து தெரிந்

தெடுக்கப்பட்டிருக்கின்றன. அக்கிரந்த கர்த்தர்களுக்கு வந்தனம் அளிக்கப்படுகிறது. இக்கதைகளை மாணாக்கர்களுக்கு சுலபமாய்ப் போதிக்கும் முறைக்கு ஒப்ப சில மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றன. **தொடர்மொழிகளைத்** தனித்தனி மொழிகளாகவும், கடினமான பதங்களுக்குப் பதிலாக சுலபமான பதங்களையும், பெரிய வாசகங்களுக்குப் பதிலாக சிறிய வாசகங்களும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. **ஸந்தி** விதிகளை ஆங்காங்கு அநுசரிக்கவில்லை. தமிழில் மொழிபெயர்க்கச் சௌகரியமாயிருப்பதற்காக பாஷா வார்த்தைகளை மாற்றவேண்டியதாய் நேரிட்டிருக்கிறது. ஆகையால் பாஷா நடையை முழுவதும் அநுசரிக்கமுடியவில்லை. பாஷா வாக்கியங்களுக்கு உள்ளபடி மூலார்த்தம் சொல்லப்பட்டிருக்கிறது. தவிர வாசகப் போக்கில் கூடினமட்டும் பண்டிதர்களின் முறையே அநுசரிக்கப்பட்டிருக்கிறது. வார்த்தைகளுடைய மூலார்த்தம் சில இடங்களில் பொருந்தாமலிருக்கிறது. அந்த இடங்களில் பொருந்தின அர்த்தம் முதலில் எழுதி அதின்பிறகு மூலார்த்தத்தை [ ] இம்மாதிரியான குறிகளுக்குள் எழுதப்பட்டிருக்கின்றது. பரிபாஷை செய்யும்பொழுது இரண்டு மூன்று பதங்களை ஒரே தடவையில் சொல்லும்படி நேரிட்டவிடங்களில் அவைகள் ( ) இம்மாதிரியான குறிகளில் அடக்கப்பட்டிருக்கின்றன.

ஸம்ஸ்கிருத பாஷாபிவிருத்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் க்ரந்தத்தொடர்ச்சியில் இப்புஸ்தகம் முதலாவதாகும். கிரந்தாக்ஷரத்திலும், இந்தியா தேசத்திலுள்ள சகல பாஷைகளிலும், இங்கிலீஷிலும், பதிப்புக்கள் சீக்கிரத்தில் வெளிவரும்.

இப்புஸ்தகத்திற்காக அநேக ஆலோசனைகளை சொன்னதற்காகவும், அக்ஷரப் பிழைகள் இல்லாமல் அச்சிடுவதில் ப்ரயாசை எடுத்துக்கொண்டதற்காகவும் திரிசிரபுரம் ஹிந்து ஸ்கூல் பண்டிதர் கிருஷ்ண தீக்ஷதருக்கும், செயின்ட் ஜோஸப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் அச்சாபீஸிலிருக்கும் ப்ரம்ஹஸ்ரீ K. ஸ்ரீனிவாஸ அய்யருக்கும் வந்தனமளிக்கப்படுகிறது.

இப்புஸ்தகம் லாபத்தைக் கருதி வெளியிடப்பட்டதல்ல. ஸம்ஸ்கிருத பாஷையாகிய இத்தேவபாஷையை இப்பாரத வருஷம் முழுவதும் பரவச்செய்து அதன்மூலமாக புராணங்கள், இதிஹாஸங்கள், காவ்யங்கள், தர்மசாஸ்திரங்கள், வேத வேதாந்த சாஸ்திரங்கள் முதலியவைகளைப் பரவச் செய்ய வேண்டுமென்பதே ஒழிய வேறில்லை. ஆதலால் இஃது அடக்க விலைக்கே விற்கப்படும்.

ஆகையால் இப்பாரத கண்டத்தில் வாசம் செய்யும் ஸ்திரீ, புருஷர்கள், குழந்தைகள் முதலிய ஸம்ஸ்கிருத பாஷை படிக்க விரும்பும் ஒவ்வொருவருக்கும் இது அத்யாவசியம். ஒவ்வொரு குடும்பத்தின் **தலைவர்** தன்னுடைய கிருஹத்திலும், ஒவ்வொரு பாடசாலை **மானேஜர்** தன் பாடசாலையிலும், ஒவ்வொரு **சீமாட்டி** தன் புத்திரிகளுக்கும், மருமக்களுக்கும், இக்கிரந்தத்தை வாங்கி போதிக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அம்மாதிரி செய்தால் இப்புராதன புண்ய பூமியாகிய பரதகண்டத்தில் அதிர்ஷ்ட வசத்தால் ஜெனித்திருக்கும் ஒவ்வொரு மனிதரும்—அல்லது குறைந்த பக்ஷம் ஒவ்வொரு ஸனாதன தர்மியும்—தன் வேத சாஸ்திரங்கள் அடங்கிய இப்பரிசுத்த பாஷையில் தேர்ச்சியடைந்து கிருதார்த்தராவார்களென்பது நிச்சயம்.

1—3—1916. ஸாம்பசிவ ஆர்ய:.

# ॥ संस्कृत-तामिलमञ्जरी ॥

## ஸம்ஸ்க்ருத - தமிழ் மஞ்ஜரி.

### स्वराः = உயிரெழுத்துக்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ | ऊ |
| அ | ஆ | இ | ஈ | உ | ஊ |

| | | | | |
|---|---|---|---|---|
| *ऋ | †ॠ | ‡ऌ | ए | ऐ |
| ரு | ரூ | லு | எ | ஐ |

| | | | |
|---|---|---|---|
| ओ | औ | अं | अः |
| ஓ | ஔ | அம் | அ: |

### व्यञ्जनानि = மெய்யெழுத்துக்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| क க | ख க2 | ग க3 | घ க4 | ङ ங |
| §च ச | छ ச2 | ज ஜ | झ ஜ2 | ञ ஞ |
| ट ட | ठ ட2 | ड ட3 | ढ ட4 | ण ண |
| त த | थ த2 | द த3 | ध த4 | न ன |
| प ப | फ ப2 | ब ப3 | भ ப4 | म ம |

| | | | |
|---|---|---|---|
| य ய | र ர | ल ல | व வ |
| ‖श ச | ष ஷ | स ஸ | ह ஹ |
| ळ ள | क्ष க்ஷ | ज्ञ க்ஞ | |

* ऋ (ரு) என்பதற்கு சுமாராக 'ரு' என்று உச்சரிப்பு. உதா.: க்ருஷ்ணன்.
† ॠ (ரூ) என்பதற்கு சுமாராக 'ரூ' என்று உச்சரிப்பு.
‡ ऌ (லு) என்பதற்கு சுமாராக 'லு' என்று உச்சரிப்பு.
§ च (ச) என்பதற்கு 'தச்சன்', 'அச்சம்' என்கிற பதங்களில் 'ச'-வுக்கு இருக்கிற உச்சரிப்பு.
‖ श (ச) என்பதற்கு 'பசு', 'சங்கரன்' என்கிற பதங்களில் 'ச'-வுக்கு இருக்கிற உச்சரிப்பு.

## संयुक्त-व्यञ्जनानि = உயிரெழுத்துக்களோடு கூடிய மெய்யெழுத்துக்கள்.

| அடையாளங்கள் : | | ा | ि | ी | ु | ू | ृ | ॄ | ॢ | े | ै | ो | ौ | ं | ः |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஆ | இ | ஈ | உ | ஊ | ரு | ரூ | லு | ஏ | ஐ | ஓ | ஔ | அம் | அ: |
| க | क | का | कि | की | कु | कू | कृ | कॄ | कॢ | के | कै | को | कौ | कं | कः । |
| | க | கா | கி | கீ | கு | கூ | க்ரு | க்ரூ | க்லு | கே | கை | கோ | கௌ | கம் | க: |
| ச | च | चा | चि | ची | चु | चू | चृ | चॄ | चॢ | चे | चै | चो | चौ | चं | चः । |
| | ச | சா | சி | சீ | சு | சூ | ச்ரு | ச்ரூ | ச்லு | சே | சை | சோ | சௌ | சம் | ச: |
| ட | ट | टा | टि | टी | टु | टू | टृ | टॄ | टॢ | टे | टै | टो | टौ | टं | टः । |
| | ட | டா | டி | டீ | டு | டூ | ட்ரு | ட்ரூ | ட்லு | டே | டை | டோ | டௌ | டம் | ட: |
| த | त | ता | ति | ती | तु | तू | तृ | तॄ | तॢ | ते | तै | तो | तौ | तं | तः । |
| | த | தா | தி | தீ | து | தூ | த்ரு | த்ரூ | த்லு | தே | தை | தோ | தௌ | தம் | த: |

| | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப | प | पा | पि | पी | पु | पू | पृ | पॄ | पॢ | पे | पै | पो | पौ | पं | पः। |
| | ப | பா | பி | பீ | பு | பூ | ப்ரு | ப்ரூ | ப்லு | பே | பை | போ | பௌ | பம் | ப: |
| ய | य | या | यि | यी | यु | यू | यृ | यॄ | यॢ | ये | यै | यो | यौ | यं | यः। |
| | ய | யா | யி | யீ | யு | யூ | ய்ரு | ய்ரூ | ய்லு | யே | யை | யோ | யௌ | யம் | ய: |
| ர | र | रा | रि | री | रु | रू | .... | .... | .... | रे | रै | रो | रौ | रं | रः। |
| | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ... | ... | ... | ரே | ரை | ரோ | ரௌ | ரம் | ர: |
| ல | ल | ला | लि | ली | लु | लू | ऌ | ॡ | .... | ले | लै | लो | लौ | लं | लः। |
| | ல | லா | லி | லீ | லு | லூ | லு | லூ | ... | லே | லை | லோ | லௌ | லம் | ல: |
| வ | व | वा | वि | वी | वु | वू | वृ | वॄ | वॢ | वे | वै | वो | वौ | वं | वः। |
| | வ | வா | வி | வீ | வு | வூ | வ்ரு | வ்ரூ | வ்லு | வே | வை | வோ | வௌ | வம் | வ: |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| க2 | ख | खा | खि | खी | खु | खू | खृ | खॄ | खॢ | खे | खै | खो | खौ |
| | க | கா | கி | கீ | கு | கூ | க்ரு | க்ரூ | க்லு | கே | கை | கோ | கௌ |
| க3 | ग | गा | गि | गी | गु | गू | गृ | गॄ | | गे | गै | गो | गौ |
| | க | கா | கி | கீ | கு | கூ | க்ரு | க்ரூ | ,, | கே | கை | கோ | கௌ |
| க4 | घ | घा | घि | घी | घु | घू | घृ | घॄ | | घे | घै | घो | घौ |
| | க | கா | கி | கீ | கு | கூ | க்ரு | க்ரூ | ,, | கே | கை | கோ | கௌ |
| ங | ङ | ङा | ङि | ङी | ङु | ङू | ङृ | ङॄ | | ङे | ङै | ङो | ङौ |
| | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ங்ரு | ங்ரூ | ,, | ஙே | ஙை | ஙோ | ஙௌ |
| ச2 | छ | छा | छि | छी | छु | छू | छृ | छॄ | | छे | छै | छो | छौ |
| | ச | சா | சி | சீ | சு | சூ | ச்ரு | ச்ரூ | ,, | சே | சை | சோ | சௌ |
| ஜ | ज | जा | जि | जी | जु | जू | जृ | जॄ | | जे | जै | जो | जौ |
| | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜ்ரு | ஜ்ரூ | ,, | ஜே | ஜை | ஜோ | ஜௌ |
| ஜ2 | झ | झा | झि | झी | झु | झू | झृ | झॄ | | झे | झै | झो | झौ |
| | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜ்ரு | ஜ்ரூ | ,, | ஜே | ஜை | ஜோ | ஜௌ |
| ஞ | ञ | ञा | ञि | ञी | ञु | ञू | ञृ | ञॄ | | ञे | ञै | ञो | ञौ |
| | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞ்ரு | ஞ்ரூ | ,, | ஞே | ஞை | ஞோ | ஞௌ |
| ட2 | ठ | ठा | ठि | ठी | ठु | ठू | ठृ | ठॄ | | ठे | ठै | ठो | ठौ |
| | ட | டா | டி | டீ | டு | டூ | ட்ரு | ட்ரூ | ,, | டே | டை | டோ | டௌ |
| ட3 | ड | डा | डि | डी | डु | डू | डृ | डॄ | | डे | डै | डो | डौ |
| | ட | டா | டி | டீ | டு | டூ | ட்ரு | ட்ரூ | ,, | டே | டை | டோ | டௌ |
| ட4 | ढ | ढा | ढि | ढी | ढु | ढू | ढृ | ढॄ | | ढे | ढै | ढो | ढौ |
| | ட | டா | டி | டீ | டு | டூ | ட்ரு | ட்ரூ | ,, | டே | டை | டோ | டௌ |
| ண | ण | णा | णि | णी | णु | णू | णृ | णॄ | | णे | णै | णो | णौ |
| | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ண்ரு | ண்ரூ | ,, | ணே | ணை | ணோ | ணௌ |
| த2 | थ | था | थि | थी | थु | थू | थृ | थॄ | | थे | थै | थो | थौ |
| | த | தா | தி | தீ | து | தூ | த்ரு | த்ரூ | ,, | தே | தை | தோ | தௌ |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| த3 | द | दा | दि | दी | दु | दू | दृ | दॄ | | दे | दै | दो | दौ |
| | த | தா | தி | தீ | து | தூ | த்ரு | த்ரூ | ,, | தே | தை | தோ | தௌ |
| த4 | ध | धा | धि | धी | धु | धू | धृ | धॄ | | धे | धै | धो | धौ |
| | த | தா | தி | தீ | து | தூ | த்ரு | த்ரூ | ,, | தே | தை | தோ | தௌ |
| ன | न | ना | नि | नी | नु | नू | नृ | नॄ | | ने | नै | नो | नौ |
| | ந | நா | நி | நீ | நு | நூ | ந்ரு | ந்ரூ | ,, | நே | நை | நோ | நௌ |
| ப2 | फ | फा | फि | फी | फु | फू | फृ | फॄ | | फे | फै | फो | फौ |
| | ப | பா | பி | பீ | பு | பூ | ப்ரு | ப்ரூ | ,, | பே | பை | போ | பௌ |
| ப3 | ब | बा | बि | बी | बु | बू | बृ | बॄ | | बे | बै | बो | बौ |
| | ப | பா | பி | பீ | பு | பூ | ப்ரு | ப்ரூ | ,, | பே | பை | போ | பௌ |
| ப4 | भ | भा | भि | भी | भु | भू | भृ | भॄ | | भे | भै | भो | भौ |
| | ப | பா | பி | பீ | பு | பூ | ப்ரு | ப்ரூ | ,, | பே | பை | போ | பௌ |
| ம | म | मा | मि | मी | मु | मू | मृ | मॄ | | मे | मै | मो | मौ |
| | ம | மா | மி | மீ | மு | மூ | ம்ரு | ம்ரூ | ,, | மே | மை | மோ | மௌ |
| ச | श | शा | शि | शी | शु | शू | शृ | शॄ | | शे | शै | शो | शौ |
| | ச | சா | சி | சீ | சு | சூ | ச்ரு | ச்ரூ | ,, | சே | சை | சோ | சௌ |
| ஷ | ष | षा | षि | षी | षु | षू | षृ | षॄ | | षे | षै | षो | षौ |
| | ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷ்ரு | ஷ்ரூ | ,, | ஷே | ஷை | ஷோ | ஷௌ |
| ஸ | स | सा | सि | सी | सु | सू | सृ | सॄ | | से | सै | सो | सौ |
| | ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸ்ரு | ஸ்ரூ | ,, | ஸே | ஸை | ஸோ | ஸௌ |
| ஹ | ह | हा | हि | ही | हु | हू | हृ | हॄ | | हे | है | हो | हौ |
| | ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹ்ரு | ஹ்ரூ | ,, | ஹே | ஹை | ஹோ | ஹௌ |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| १ | २ | ३ | ४ | ५ | ६ | ७ | ८ | ९ | ० |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 0 |

குறிப்பு :—ஸம்ஸ்க்ருதத்தின் क्, ङ्, च्, ज्, ञ्, ट्, ण्,......முதலிய எழுத்துக்களை க், ங், ச், ஜ் ஞ், ட், ண்...... என்னும் மாதிரியாய் உச்சரிக்கவேண்டும்.

क—क्क (क्-क), क्ख (क्-ख), क्च (क्-च), क्छ (क्-छ), क्त (क्-त), क्न (क्-न),
க1— க்1க1, க்1க2, க்1ச1, க்1ச2, க்1த1, க்1ன,

क्म (क्-म), क्य (क्-य), क्र (क्-र), क्ल (क्-ल), क्व (क्-व) ।
க்1ம, க்1ய, க்1ர, க்1ல, க்1வ.

ख—ख्य (ख्-य), ख्र (ख्-र) ।
க2— க்2ய, க்2ர.

ग—ग्ग (ग्-ग), ग्न (ग्-न), ग्म (ग्-म), ग्य (ग्-य), ग्र (ग्-र), ग्ल (ग्-ल) ।
க3— க்3க3, க்3ன, க்3ம, க்3ய, க்3ர, க்3ல.

घ—घ्न (घ्-न), घ्य (घ्-य), घ्र (घ्-र) ।
க4— க்4ன, க்4ய, க்4ர.

ङ—ङ्क (ङ्-क), ङ्ख (ङ्-ख), ङ्ग (ङ्-ग), ङ्घ (ङ्-घ), ङ्म (ङ्-म), ङ्क्त (ङ्-क्-त),
ங— ங்க1, ங்க2, ங்க3, ங்க4, ங்ம, ங்க்1த1,

ङ्क्ष (ङ्-क्-ष), ङ्ग्र (ङ्-ग्-र) ।
ங்க்1ஷ, ங்க்3ர.

---

च—च्च (च्-च), च्छ (च्-छ), च्न (च्-न), च्य (च्-य), च्र (च्-र), च्ल (च्-ल) ।
ச1— ச்1ச1, ச்1ச2, ச்1ன, ச்1ய, ச்1ர, ச்1ல.

छ—छ्र (छ्-र), छ्व (छ्-व) ।
ச2— ச்2ர, ச்2வ.

ज—ज्ज (ज्-ज), ज्न (ज्-न), ज्य (ज्-य), ज्र (ज्-र), ज्व (ज्-व) ।
ஜ1— ஜ்1ஜ1, ஜ்1ன, ஜ்1ய, ஜ்1ர, ஜ்1வ.

ञ—ञ्च (ञ्-च), ञ्छ (ञ्-छ), ञ्ज (ञ्-ज), ञ्च्व (ञ्-च्-व) ।
ஞ— ஞ்ச1, ஞ்ச2, ஞ்ஜ1, ஞ்ச்1வ.

---

ट—ट्ट (ट्-ट), ट्य (ट्-य), ट्र (ट्-र), ट्व (ट्-व)।
ட1— ட்1ட1, ட்1ய, ட்1ர, ட்1வ.

ठ—ठ्ठ (ठ्-ठ), ठ्य (ठ्-य)।
ட2— ட்2ட2, ட்2ய.

ड—ड्ड (ड्-ड), ड्ढ (ड्-ढ), ड्य (ड्-य), ड्र (ड्-र), ड्व (ड्-व)।
ட3— ட்3ட3, ட்3ட4, ட்3ய, ட்3ர, ட்3வ.

ढ—ढ्ढ (ढ्-ढ), ढ्य (ढ्-य), ढ्र (ढ्-र), ढ्व (ढ्-व)।
ட4— ட்4ட4, ட்4ய, ட்4ர, ட்4வ.

ण—ण्ट (ण्-ट), ण्ड (ण्-ड), ण्ण (ण्-ण), ण्म (ण्-म), ण्य (ण्-य), ण्व (ण्-व)।
ண— ண்ட1, ண்ட3, ண்ண, ண்ம, ண்ய, ண்வ.

---

त—त्त (त्-त), त्थ (त्-थ), त्न (त्-न), त्प (त्-प), त्म (त्-म), त्य (त्-य),
த1— த்1த1, த்1த2, த்1ன, த்1ப1, த்1ம, த்1ய,
त्र (त्-र), त्व (त्-व), त्स (त्-स)।
த்1ர, த்1வ, த்1ஸ.

थ—थ्य (थ्-य), थ्र (थ्-र)।
த2— த்2ய, த்2ர.

द—द्ग (द्-ग), द्ग्र (द्-ग्-र), द्घ (द्-घ), द्द (द्-द), द्द्र (द्द्-र), द्द्व (द्द्-व),
த3— த்3க3. த்3க்3ர, த்3க4, த்3த3, த்3த்3ர, த்3த்3வ,
द्ध (द्-ध), द्ध्य (द्-ध्-य), द्ध्र (द्-ध्-र), द्न (द्-न), द्ब (द्-ब),
த்3த4, த்3த்4ய, த்3த்4ர, த்3ன, த்3ப3,
द्ब्र (द्-ब्-र), द्भ (द्-भ), द्भ्य (द्-भ्-य), द्भ्र (द्-भ्-र), द्म (द्-म),
த்3ப்3ர, த்3ப4. த்3ப்4ய, த்3ப்4ர, த்3ம,
द्य (द्-य), द्र (द्-र), द्र्य (द्-र्-य), द्व (द्-व), द्व्य (द्-व्-य)।
த்3ய, த்3ர த்3ர்ய, த்3வ, த்3வ்ய.

ध—ध्न (ध्-न), ध्म (ध्-म), ध्य (ध्-य), ध्र (ध्-र), ध्व (ध्-व)।
த4— த்4ன, த்4ம, த்4ய, த்4ர த்4வ.

न—न्त (न्-त), न्थ (न्-थ), न्द (न्-द) न्ध (न्-ध), न्न (न्-न), न्म (न्-म),
ன— ன்த1, ன்த2, ன்த3, ன்த4, ன்ன, ன்ம,

न्य (न्-य), न्र (न्-र), न्व (न्-व)।
ன்ய, ன்ர, ன்வ.

---

प—प्त (प्-त), प्न (प्-न), प्म (प्-म), प्य (प्-य), प्र (प्-र), प्ल (प्-ल)।
ப1— ப்'த1, ப்1ன, ப்1ம, ப்1ய, ப்1ர, ப்1ல.

ब—ब्ज (ब्-ज), ब्द (ब्-द), ब्ध (ब्-ध), ब्न (ब्-न), ब्य (ब्-य), ब्र (ब्-र)।
ப3— ப்4ஜ1, ப்3த3, ப்3த4, ப்3ன, ப்3ய, ப்3ர.

भ—भ्य (भ्-य), भ्र (भ्-र)।
ப4— ப்4ய, ப்4ர.

म—म्न (म्-न), म्ब (म्-ब), म्भ (म्-भ), म्म (म्-म), म्य (म्-य), म्र (म्-र)।
ம— ம்ன, மப3, ம்ப4, ம்ம, ம்ய, ம்ர.

---

य—य्य (य्-य)।
ய— ய்ய.

र—र्क (र्-क), र्ग (र्-ग)। அடியில் குறிப்பைப் பார்க்கவும்.
ர— ற்2க1, ற்க3.

ल—ल्प (ल्-प), ल्ब (ल्-ब), ल्म (ल्-म), ल्य (ल्-य), ल्ल (ल्-ल) ल्व (ल्-व)।
ல— ல்ப1, ல்ப3, ல்ம, ல்ய, ல்ல, ல்வ.

व—व्य (व्-य), व्र (व्-र), व्व (व्-व)।
வ— வ்ய, வ்ர, வ்வ.

श—श्च (श्-च), श्न (श्-न), श्म (श्-म), श्य (श्-य), श्र (श्-र), श्ल (श्-ल),
ச— ச்ச1, ச்ன, ச்ம, ச்ய, ச்ர, ச்ல,

श्व (श्-व), श्श (श्-श)।
ச்வ, ச்ச.

ॅ—இந்த அடையாளம் (ரேபம்) எந்த மெய்யெழுத்தின்மேல் வந்தாலும் "ற்" என்னும் உச்சரிப்பை முதலாகப்பெறும்.

உதாரணம் :—र्क, र्ङ, र्च, र्ज, र्ञ, र्ण, ......
ற்க, ற்ங, ற்ச, ற்ஜ, ற்ஞ, ற்ண......முதலியன.

**ष ष्क (ष्-क), ष्ट (ष्-ट), ष्ट्य (ष्-ट्-य), ष्ट्व (ष्-ट्-व), ष्ठ (ष्-ठ), ष्ण (ष्-ण),**
ஷ— ஷ்க1, ஷ்ட1, ஷ்ட்1ய, ஷ்ட்1வ, ஷ்ட2, ஷ்ண,

**ष्म (ष्-म), ष्य (ष्-य), ष्व (ष्-व) ।**
ஷ்ம, ஷ்ய, ஷ்வ.

**स—स्क (स्-क), स्त (स्-त), स्थ (स्-थ), स्न (स्-न), स्प (स्-प), स्फ (स्-फ),**
ஸ — ஸ்க1, ஸ்த1, ஸ்த2, ஸ்ன, ஸ்ப1, ஸ்ப2,

**स्म (स्-म), स्य (स्-य), स्र (स्-र), स्व (स्-व), स्स (स्-स) ।**
ஸ்ம, ஸ்ய, ஸ்ர, ஸ்வ, ஸ்ஸ

**ह—ह्ण (ह्-ण), ह्न (ह्-न), ह्म (ह्-म), ह्य (ह्-य), ह्र (ह्-र), ह्ल (ह्-ल), ह्व (ह्-व) ।**
ஹ — ஹ்ண, ஹ்ன, ஹ்ம ஹ்ய, ஹ்ர, ஹ்ல, ஹ்வ.

**क्ष्ण (क्-ष्-ण), क्ष्य (क्-ष्-य), क्ष्म्य (क्-ष्-म्-य), ग्र्य (ग्-र्-य), त्र्य (त्-र्-य),**
க்1ஷ்ண, க்1ஷ்ய, க்1ஷ்ம்ய க்3ர்ய த்1ர்ய,

**च्छ्र (च्-छ्-र), च्छ्व (च्-छ्-व), त्प्र (त्-प्-र), त्स्न (त्-स्-न),**
ச்1ச்2ர, ச்1ச்2வ, த்1ப்1ர, த்1ஸ்ன,

**र्त्स्न्य (र्-त्-स्-न्-य), र्ह्य (र्-ह्-य), ष्ट्र (ष्-ट्-र), स्म्य (स्-म्-य),**
ர்த்1ஸ்ன்ய, ர்ஹ்ய, ஷ்ட்ர, ஸ்ம்ய,

**स्त्र (स्-त्-र), ह्म्य (ह्-म्-य) ॥**
ஸ்த்1ர, ஹ்ம்ய.

---

# सुलभ–वाक्यानि ।

## ஸுலபமான வசனங்கள்

| | | |
|---|---|---|
| कमलानि पश्यामि | கமலாநி பச்யாமி | ... தாமரைகளைப் பார்க்கிறேன். |
| हस्तौ क्षालयामि | ஹஸ்தௌ க்ஷாலயாமி | ... 2 கைகளைக் கழுவுகிறேன். |
| अहं देवं तुष्यामि | அஹம் தேவம் துஷ்யாமி | ... நான் கடவுளை சந்தோஷப்படுத்துகிறேன். |
| ग्रामं अटावः | க்3ராமம் அடாவ: | .. (* நாங்கள் இருவரும்) கிராமத்தில் [த்தை] திரிகிறோம். |
| सुखेन जीवावः | ஸுகே2ந ஜீவாவ: | ... (நா-இ.) ஸுகமாக வசிக்கிறோம் |
| तत्वं बोधावः | தத்வம் போ3தா4வ : | ... ,, உண்மையை அறிகிறோம் |
| सुवर्णं तोलयामः | ஸுவர்ணம் தோலயாம: | ... பொன்னை நிறுக்கிறோம். † |
| बालानां धर्मं कथयामः | பா3லாநாம் த4ர்மம் கத2யாம : | ... பாலர்களுக்கு நீதியைச் சொல்லுகிறோம். |
| देवान् यजामः | தே3வான் யஜாம : | ... தேவர்களை ஆராதிக்கிறோம். |
| नगरं गच्छसि | நக3ரம் க3ச்ச2ஸி | ... பட்டணம் போகிறாய். |
| सत्यं वदसि | ஸத்யம் வத3ஸி | ... மெய்யைச் சொல்லுகிறாய். |
| मित्राणि स्मरसि | மித்ராணி ஸ்மரஸி | ... தோழர்களை நினைக்கிறாய். |
| जलं पिबथः | ஜலம் பிப3த2: | ... (‡ நீங்கள் இருவரும்) தண்ணீரைக்குடிக்கிறீர்கள். |
| पुस्तकानि मार्गयथः | புஸ்தகாநி மார்க3யத2: | ... (நீ-இ.) புஸ்தகங்களைத் தேடுகிறீர்கள். |
| ब्राह्मणान् प्रीणयथः | ப்ராம்ஹணான் ப்ரீணயத2: | ... (நீ-இ.) பிராமணர்களைச் சந்தோஷப்படுத்துகிறீர்கள். |
| ब्राह्मणेभ्यः निष्कान् यच्छथ | ப்3ராம்ஹணேப்4ய: நிஷ்கான் யச்ச2த2 | ... அந்தணர்களுக்கு தங்க நாணயங்களைக் கொடுக்கிறீர்கள். |
| सर्वदा सत्यं वदथ | ஸர்வதா3 ஸத்யம் வத3த2 | ... எப்பொழுதும் நிஜம் சொல்லுகிறீர்கள். |
| वापीभ्य जलं वहथ | வாபீப்4ய: ஜலம் வஹத2 | ... கிணர்களிலிருந்து ஜலத்தைக் கொண்டுபோகிறீர்கள். |

* "நாங்கள் இருவர்" என்பதற்குப் பதிலாக இனிமேல் (நா-இ.) என்று எழுதப்படும்.

† பன்மை உபயோகித்திருக்குமிடங்களில், மூன்று அல்லது அதற்குமேல் என்று தெரிந்துகொள்க.

‡ "நீங்கள் இருவர்" என்பதற்குப் பதிலாக இனி (நீ-இ.) என்று உபயோகிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ईश्वरः रक्षति | ஈச்வர: ரக்ஷதி | ... கடவுள் காப்பாற்றுகிறார். |
| नृपः जयति | ந்ருப: ஜயதி | ... அரசன் ஜயிக்கிறான். |
| कूर्मः सरति | கூர்ம: ஸரதி | ... ஆமை நகருகிறது. |
| धनं नश्यति | த4னம் நச்யதி | ... பொருள் நாசமாகிறது. |
| रामः पूजयति | ராம: பூஜயதி | ... ராமன் தொழுகிறான். |
| जलं शुष्यति | ஜலம் சுஷ்யதி | ... தண்ணீர் காய்கிறது. |
| समुद्रः शाम्यति | ஸமுத்3ர: சாம்யதி | ... கடல் சாந்தமாயிருக்கிறது. |
| उदधिः क्षुभ्यति | உத3தி4: க்ஷுப்4யதி | ... கடல் கலங்குகிறது. [றான். |
| अरिः पीडयति | அரி: பீட3யதி | ... பகையாளி தொந்திரவு செய்கி |
| नृपतिः यजति | ந்ருபதி: யஜதி | ... அரசன் யாகம் செய்கிறான். |
| अग्निः दहति | அக்3னி: த3ஹதி | ... நெருப்பு எரிக்கிறது. |
| पविः पतति | பவி: பததி | ... இடி விழுகிறது. |
| ईश्वरं जनः पूजयति | ஈச்வரம் ஜன: பூஜயதி | ... கடவுளை மனிதன் பூஜை செய்கிறான். [கிறான். |
| नृपः शठान् दण्डयति | ந்ருப: சடா2ன் த3ண்ட3யதி | அரசன் துஷ்டர்களைத் தண்டிக் |
| अश्वौ उत्पततः | அச்வௌ உத்பதத: | ... 2 குதிரைகள் குதிக்கின்றன. |
| नेत्रे पश्यतः | நேத்ரே பச்யத: | ... ,, கண்கள் பார்க்கின்றன. |
| बुधौ मुञ्चतः | பு3தௌ4 முஞ்சத: | ... ,, வித்வான்கள் விடுகிறார்கள். |
| पुत्रौ तुष्यतः | புத்ரௌ துஷ்யத: | ... ,, பிள்ளைகள் சந்தோஷப்படுகிறார்கள். |
| फले पततः | ப2லே பதத: | ... ,, கனிகள் விழுகின்றன. |
| कमले नृत्यतः | கமலே ந்ருத்யத: | ... ,, தாமரைகள் ஆடுகின்றன. |
| ऋषी चिन्तयतः | ருஷீ சிந்தயத: | ... ,, முனிகள் தபம் செய்கிறார்கள். |
| पाणी हरतः | பாணீ ஹரத: | ... ,, கைகள் எடுக்கின்றன. |
| जनाः वदन्ति | ஜனா: வத3ந்தி | ... ஜனங்கள் சொல்லுகிறார்கள் |
| नराः गच्छन्ति | நரா: க3ச்ச2ந்தி | ... மனிதர்கள் போகிறார்கள். |
| कपयः क्षिपन्ति | கபய: க்ஷிபந்தி | ... குரங்குகள் எறிகின்றன. |
| वारीणि शुष्यन्ति | வாரீணி சுஷ்யந்தி | ... தண்ணீர்கள் காய்கின்றன. |
| कवयः शंसन्ति | கவய: சம்ஸந்தி | ... கவிகள் புகழுகிறார்கள். |
| व्याधयः नश्यन्ति | வ்யாத4ய: நச்யந்தி | ... நோய்கள் நாசமாய்ப்போகின்றன |
| असयः पतन्ति | அஸய: பதந்தி | ... கத்திகள் விழுகின்றன. |

| | |
|---|---|
| गङ्गायाः जलं अपिबम् | ... கங்கையின் ஜலத்தைக் குடித்தேன். |
| सीतां वने अत्यजाव | ... ஸீதையைக் காட்டில் (நா-இ) விட்டோம். |
| अरण्ये महिषान् अपश्याम | ... காட்டில் எருமைக்கிடாக்களைக் கண்டோம். |
| सङ्कटेभ्यः जनं अरक्षः | ... கஷ்டங்களிலிருந்து மனிதனைச் காப்பாற்றி னாய். [னீர்கள். |
| पुत्राणां धर्मं अकथयतम् | ... பிள்ளைகளுக்கு தர்மத்தைச் (நீ-இ.) சொன் |
| अरौ शरान् अक्षिपत | ... சண்டையாளிகளின் பேரில் பாணங்களைப் போட்டீர்கள். |
| रामः रावणं अजयत् | ... ராமன் ராவணனை ஜயித்தான். |
| अवन्त्यां अभवताम् | ... அவந்தியில் இருவர் இருந்தார்கள். [தார்கள். |
| आचार्याः धर्मं उपादिशन् | ... ஆசார்யர்கள் தர்மத்தைச் சொல்லிக்கொடுத் |
| कथं व्याघ्राणां संनिधौ वसानि | ... எப்படிப் புலிகளுடைய சன்னிதானத்தில் வஸிப்பேன்? |
| वयस्य! उपवनं प्रविशाव | ... சினேகிதா! தோட்டத்திற்குள் (த்தை) (நா-இ.) நுழைவோம். |
| सत्यात् मा प्रमाद्याम | ... உண்மையிலிருந்து நாம் நழுவவேண்டாம். |
| वत्स! आयुष्मान् भव | ... குழந்தாய்! தீர்காயுஸு உள்ளவனாக இரு. |
| मा विनयं त्यजतम् | ... வணக்கத்தை (நீ-இ.) விடாதேயுங்கள். |
| बालकाः! अनृतं मा वदत | ... பையன்களே! பொய் சொல்லாதேயுங்கள். |
| वत्सः पितरं प्रणमतु | ... பிள்ளை தகப்பனை வணங்கட்டும் [செய்யட்டும் |
| मयूरौ प्रासादस्य शिखरे नृत्यतां | ... 2 மயில்கள் மாளிகையின் உச்சியில் நடநம் |
| अयोध्यां दूताः गच्छन्तु | ... அயோத்யைக்கு வேலைக்காரர்கள் போகட்டும் |
| ताडितः अपि धर्मं न त्यजेयम् | ... அடிக்கப்பட்டாலும் கூட தர்மத்தை விட மாட்டேன். |
| व्याकरणं आवां शिक्षेव | ... இலக்கணத்தை (நா-இ.) கற்றுக்கொள்வோம். |
| रणे वयं तान् जयेम | ... சண்டையில் நாம் அவர்களை ஜயிப்போம். |
| भूरिणा प्रयत्नेन तत्वं अवगच्छेः | ... அதிகமான முயற்சியால் தத்வத்தை (நீ) அறிந்தாய். |
| कन्ये! सुचरितैः मातरं प्रीणयेतं | ... 2 பெண்களே! நல்ல நடத்தையால் தாயை (நீ-இ.) சந்தோஷப்படுத்தவேண்டும். |
| सोमं यूयं पिबेत | ... ஸோமத்தை நீங்கள் குடிக்கவேண்டும். |
| विपत्तौ धैर्यं न परित्यजेत् | ... ஆபத்தில் தைர்யத்தை விடக்கூடாது. |
| परस्परं स्नेहं आचरेताम् | .. (நீ-இ.) ஒருவரோடொருவர் நேசத்தைப் பா ராட்டவேண்டும். [சாமல் இருக்கவேண்டும். |
| पण्डितानां समाजे मूर्खाः मौनं भजेयुः | ... பண்டிதர்களுடைய சபையில் மூடர்கள் பே [பேசாமையை அடையவேண்டும்.] |

## परस्मैपदम् ।

### 5. लिट् (லிட்) = ஒருவிதமான இறந்தகாலம்.

गङ्गातीरे दिव्यं आश्रमं ददर्श ... கங்கைக்கரையில் திவ்யமான ஆச்ரமத்தைப் பார்த்தேன்.

आवां चोरस्य पाणीं जगृहिव ... நா-இ. கள்ளனுடைய 2 கைகளைப்பிடித்தோம்

बालकाय मोदकान् वयं न ददिम ... பையனுக்கு பக்ஷணங்களை நாங்கள் கொடுக்கவில்லை.

किं त्वं तद्गृहं विवेशिथ ? ... ஏன் நீ அந்த வீட்டில் [டை] பிரவேசித்தாய்?

किं तां युवां पप्रच्छथुः ? ... எதை அவளிடம் [அவளை] (நீ-இ.) கேட்டீர்கள்?

कियत् वसु ब्राह्मणेभ्यः यूयं दद ? ... எவ்வளவு பொருள் பிராமணர்களுக்கு நீங்கள் கொடுத்தீர்கள் ?

पुरा दुष्यन्तः नाम राजा बभूव ... முன்காலத்தில் துஷ்யந்தன் என்று பேரான ராஜன் இருந்தான்.

व्याधौ श्वापदान् जघ्नतुः ...2 வேடர்கள் காட்டுமிருகங்களைக் கொன்றார்கள்

सैनिकाः राजानं अनुजग्मुः ... ஸேனாதிபதிகள் ராஜனைப் பின்தொடர்ந்தார்கள்.

### 6. लुट् (லுட்) = 1-வது எதிர்காலம்.

अहं चेन्नपुरीं द्रष्टास्मि ... நான் சென்னப்பட்டணத்தைப் பார்க்கப்போகிறேன்.

आवां राजानं द्रष्टास्वः ... (நா.-இ.) ராஜாவைப் பார்க்கப்போகிறோம்.

वयं देशान् द्रष्टास्मः ... நாங்கள் தேசங்களைப் பார்க்கப்போகிறோம்.

याचकेभ्यः धनं दातासि ... யாசகர்களுக்குப் பொருளை நீ கொடுக்கப் போகிறாய்.

कस्मै मणीन् दातास्थः ? ... யார்பொருட்டு ரத்னங்களை (நீ.-இ.) கொடுக் [கப்போகிறீர்கள் ?

कन्याभ्यः आभरणानि दातास्थ ... பெண்களின்பொருட்டு நகைகளை கொடுக்கப் போகிறீர்கள்.

सः कुत्र गन्ता ? .. அவன் எங்கே போகப்போகிறான் ?

तौ पितुः गृहं गन्तारौ ... அவர்களிருவரும் தகப்பனுடைய வீட்டுக்குப் (வீட்டை) போகப்போகிறார்கள்.

बालकाः पाठशालां गन्तारः ... பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குப் (தை) போகப் போகிறார்கள்.

### 7. लृट् (ல்ருட்) = 2-வது எதிர்காலம்.

हरिद्वारं गमिष्यामि ... ஹரித்வாரத்திற்கு போகப்போகிறேன். [றேன்

तत्र हिमाचलं द्रक्ष्यामि ... அவ்விடத்தில் இமயமலையைப் பார்க்கப்போகி

| | |
|---|---|
| परस्परं सुहृदौ भविष्यावः | ...ஒருவருக்கொருவர் நேசர்களாக (நா-இ.) இருக்கப்போகிறோம். |
| सदा सत्यं एव वदिष्यामः | ... எப்பொழுதும் நிஜத்தையே பேசப்போகிறோம். |
| तातस्य प्रश्नस्य किं प्रतिवक्ष्यसि ? | ... தகப்பனுடைய கேள்விக்கு என்ன பதில் சொல்லப்போகிறாய் ? தீர்கள் ? |
| आरामे किं द्रक्ष्यथः | ... தோட்டத்தில் (நீ-இ.) எதைப் பார்க்கப்போகி |
| यत् हितकरं तत् करिष्यथ | ... எது பிடித்ததோ அதைச் செய்யப்போகிறீர்கள். |
| नन्दः राजा भविष्यति | ... நந்தன் அரசனாக ஆகப்போகிறான். |
| प्रतिदिनं पुष्पाणि आनेष्यतः | ... தினந்தோறும் (அ-இ.) புஷ்பங்களைக் கொண்டுவரப்போகிறார்கள். |
| गोपाः गाः धोक्ष्यन्ति | ... இடையர்கள் பசுக்களைக் கரக்கப்போகிறார்கள். |

8. लृङ् (ல்ருங்) = ஈரட்டான காலம்.

| | |
|---|---|
| काशीं अगमिष्यं यदि | ... காசிக்கு (காசியை) போவேன் ஆனால் |
| तदा विश्वनाथं अद्रक्ष्यम् । | அப்பொழுது விச்வநாதஸ்வாமியைப்பார்ப்பேன். |
| तव पितरं अद्रक्ष्याव यदि | ... உன் தகப்பனை [நா.-இ.] பார்ப்போமானால் |
| तदा वृत्तान्तान् अकथयिष्याव | அப்பொழுது நடந்த ஸமாசாரங்களை [நா.-இ.] சொல்வோம். |
| न अभोक्ष्याम यदि | ... [நாங்கள்] சாப்பிடாவிட்டால் |
| प्राणान् अत्यक्ष्याम । | உயிரை (உயிர்களை) விடுவோம். |
| पाठं न अपठिष्यः यदि | ... பாடத்தை (நீ) படிக்கமாட்டாய் ஆகில் |
| तदा विद्यां न अवाप्स्यः । | அப்பொழுது வித்தையை அடையமாட்டாய். |
| गुरुं अनंस्यतं यदि | ... குருவை [நீ.-இ.] வணங்கினீர்கள் ஆகில் |
| तदा दीर्घायुषौ अभविष्यतम् । | அப்பொழுது தீர்க்காயுஸ் உள்ளவர்களாக [நீ.இ.] ஆவீர்கள். |
| गृहं अगमिष्यत यदि | ... வீட்டிற்குப் [வீட்டை] போனீர்கள் ஆகில் |
| युष्माकं पितरं अद्रक्ष्यत । | உங்களுடைய தகப்பனை (நீங்கள்) பார்ப்பீர்கள். |
| सुवृष्टिः अभविष्यत् चेत् | ... நல்ல மழை உண்டாகும் ஆனால் |
| तदा सुभिक्षं अभविष्यत् । | அப்பொழுது ஸுபிக்ஷம் உண்டாகும். [ருந்தால் |
| योधौ अग्निं न अशमयिष्यतां यदि | ... இரண்டு படையாளிகள் தீயை அணைக்காதி |
| नगरं अधक्ष्यत् । | பட்டணம் எரிந்துபோயிருக்கும். |
| शत्रूणां देशं प्रावेक्ष्यन् यदि | ...பகையாளிகளுடைய தேசத்தை பிரவேசித்திரு |
| जनान् अहनिष्यन् । | ந்தால் ஜனங்களை நாசம் செய்திருப்பார்கள். |

## 9. आशीर्लिङ् (ஆசீர்லிங்) = ஆசீர்வசனம்.

अहं सभां दृश्यासम् ... நான் சபையைப் பார்க்கவேண்டும்.

आवां कल्याणं दृश्यास्व ... (நா.-இ.) கல்யாணத்தைப் பார்க்கவேண்டும்.

वयं मधुसूदनं दृश्यास्म ... நாங்கள் மஹாவிஷ்ணுவை தரிசிக்கவேணும்.

त्वं धनिकः स्थेयाः ... நீ பணக்காரனாய் இருக்கவேண்டும்.

युवं पुत्रवन्तौ स्थेयास्तम् ... (நீ.-இ.) பிள்ளைகள் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.

यूयं ईश्वरे भक्ताः स्थेयास्त ... நீங்கள் ஈச்வரனிடத்தில் பக்தியுள்ளவர்களாக [இருக்கவேண்டும்.

पठन् द्विजः वागृषभत्वं ईयात् ... படிக்கும் அந்தணன் வார்த்தை பேசுவதில் மேலான தன்மையை அடையவேண்டும்.

इमौ दम्पती दीर्घायुषौ भूयास्तां ... இந்த தம்பதிகள் சிரஞ்சீவிகளாக இருக்க வேண்டும்.

ते समराङ्गणं गम्यासुः ... அவர்கள் யுத்தகளத்திற்குப்(தை) போகவேணும்

## 10. लुङ् (லுங்) = ஒருவிதமான இறந்தகாலம்.

नष्टं पशुं न समासदम् ... கெட்டுப்போன பசுவை நான் அடையவில்லை

नलस्य कल्याणाय अगमाव ... நளனுடைய கல்யாணத்திற்காக (நா.-இ.) போனோம்.

प्रातः आरभ्य पञ्चसप्ततिं वृक्षान् अभैत्स्म ... காலைமுதல் எழுபத்தைந்து மரங்களைப் பிளந் [தோம்.

किमर्थं तं अयाचीः ? ... எதற்காக அவனை யாசித்தாய் ?

किं काश्यां अद्राष्टम् ? ... எதை காசியில் [நீ.-இ.] பார்த்தீர்கள் ?

यूयं किं अममार्गत ? ... நீங்கள் எதைத் தேடினீர்கள் ?

काशीं गन्तुकामः पण्डितः श्रीनगरात् निरगात् ... காசியை அடையவேணுமென்று ஆசைப்பட்ட பண்டிதன் ஸ்ரீநகரத்திலிருந்து புறப்பட்டான்.

प्रासादस्य शिखरं अरुक्षताम् ... உப்பரிகையின் உச்சாணியை (அ.-இ.) ஏறி [னார்கள்.

धनकामाः गोपाः गा अपोषिषुः ... பண ஆசையடைந்த இடையர்கள் மாடுகளை வளர்த்தார்கள்.

## आत्मनेपदम् ।

### 1. लट् (லட்) = நிகழ்காலம்.

देवं वन्दे ... ஈச்வரனை வணங்குகிறேன்.

हरेः उद्यमं श्लाघावहे ... ஹரியுடைய முயற்சியை (நா-இ.) மெச்சிக் [கொள்கிறோம்.

असत्यं भाषामहे ... பொய் சொல்லுகிறோம்.

असत्यं भाषसे ... பொய் சொல்லுகிறாய்.

पुस्तकानि मृगयेथे ... புஸ்தகங்களை (நீ-இ.) தேடுகிறீர்கள்.

बालाः! विनयेन सुष्ठु शोभध्वे ... பையன்களா! மரியாதையால் நன்றாய் பிரகாசிக்கிறீர்கள்.

सूर्यः प्रकाशते ... ஸூர்யன் பிரகாசிக்கிறான்.

कटौ कुत्र वर्तेते ? ... 2 பாய்கள் எங்கே இருக்கின்றன ?

मणिकाराः मणीन् परीक्षन्ते ... ரத்தினவியாபாரிகள் ரத்தினங்களைப் பரீக்ஷிக்கிறார்கள்.

### 2. लङ् (லங்) = இறந்தகாலம்.

पितरं अहं अवन्दे ... தகப்பனை நான் வந்தனம் செய்தேன்.

अनिष्टं अशङ्कावहि ... தீங்கை (தீங்கு நேரிடுமென்று) (நா-இ.) ஸந்தேகப்பட்டோம்.

जनानां सुखाय अयतामहि ... ஜனங்களின் சுகத்திற்காக முயன்றோம்.

अनिष्टं अशङ्कथाः ... [நீ] தீங்கை ஸந்தேகித்தாய்.

मित्राणां त्यागे न अलज्जेथाम् ... சிநேகிதர்களை [ளுடைய] விடுவதில் (நீ-இ.) வெட்கத்தை அடையவில்லை.

किमर्थं व्यहसध्वम् .. எதற்கரக சிரித்தீர்கள் ?

आचार्यं शिष्यः अभ्यवादयत ... குருவை சிஷ்யன் நமஸ்காரம் செய்தான்.

सचिवौ भूपं अभाषेताम् ... 2 மந்திரிகள் அரசனிடம் [னை] பேசினார்கள்.

पाण्डवाः राज्यं अविन्दन्त ... பாண்டவர்கள் ராஜ்யத்தை அடைந்தார்கள்.

### 3. लोट् (லோட்) = ஏவல்வினை.

कथं दुःखं सहे ? ... எப்படி துக்கத்தை சகிக்கட்டும் ?

सङ्गीतं आरभावहै ... பாட்டை (நா-இ.) ஆரம்பிக்கக்கடவது.

कीर्तये यतामहै .. கீர்த்திக்காக [நாம்] முயலவேண்டும்.

शत्रुभिः सह युध्यस्व ... பகையாளிகளுடன் போர் செய்.

भूपालौ ! विजयेथाम् ... 2 அரசர்களா, (நீ-இ.) விளங்கக்கடவது.

शिष्याः ! गुरून् वन्दध्वम् ... சிஷர்களா ! குருக்களை வந்தனம் செய்யுங்கள்.

प्रजानां हिताय पार्थिवः प्रवर्ततां ... பிரஜைகளுடைய நன்மைக்காக அரசன் முயலக்கடவது.

कन्ये गीतं शिक्षेताम् ... 2 பெண்கள் பாட்டைப் படிக்கட்டும்.

मम वार्ता श्रूयन्ताम् .. என் பேச்சை (அவர்கள்) கேட்கட்டும்.

4. विधिलिङ् (விதிலிங்) = சத்துவதுறை.

पुत्रस्य अविनयं न सहेय ... பிள்ளையின் மரியாதைக் குறைவை [நான்] சகியேன்.

ईश्वरपूजया शान्तिं विन्देवहि ... ஸ்வாமிபூஜையால் பொறுமையை (நா-இ.) அடைவோம்.

पुण्यं रामचरितं श्रृण्वीमहि ... புண்யமான ராமகதையை கேட்போம்.

नृत्यं गानं च शिक्षेथाः ... நடனத்தையும் பாட்டையும் கற்றுக்கொள்.

बालौ ! गुरोः वचनं श्रृण्वीयाथाम् ... 2 பையன்களா ! குருவின் வார்த்தையை (நீ-இ.) கேளுங்கள்.

रज्जुं सर्पं न मन्येध्वम् ... கயிற்றைப் பாம்பென்று எண்ணாதேயுங்கள். [வேண்டாம்.

वर्धमानं ऋणं न उपेक्षेत ... வளரும் கடனை அசட்டை [அவன்] செய்ய

पुत्रौ सुचरितैः पितरं प्रीणयेयातां ... 2 பிள்ளைகள் நன்னடத்தையால் தகப்பனைப் பிரியப்படுத்தவேண்டும். [ண்டும்.

भूरिणा प्रयत्नेन ज्ञानं लभेरन् ... அதிகமான முயற்சியால் அறிவையடையவே

5. लिट् (லிட்) = ஒருவிதமான இறந்தகாலம்.

अहं व्याघ्रभयात् चकम्पे ... நான் புலியின் பயத்தால் (பயத்திலிருந்து) நடுங்கினேன்.

आवां चोरं दृष्ट्वा चकम्पिवहे ... (நா.-இ.) கள்ளனைப் பார்த்து நடுங்கினோம்.

वयं भूकम्पात् चकम्पिमहे ... நாங்கள் பூகம்பத்தினால் நடுங்கினோம்.

त्वं दुःखानि सेहिषे ... நீ துக்கங்களைப் பொறுத்தாய். [தீர்கள்.

युवां सूर्यस्य आतपान् सेहाथे ... (நீ.-இ.) சூர்யனுடைய வெயிலைப் பொறுத்

यूयं अतिवृष्टीः सेहिध्वे ... நீங்கள் அதிக மழைகளைப் பொறுத்தீர்கள்.

दशरथः अश्वमेधं ईजे ... தசரதன் அச்வமேதயாகத்தைச் செய்தான்.

शिष्यौ गुरून् ईजाते ... 2 சிஷர்கள் குருக்களைப் பூஜித்தார்கள்.

देवाः ब्रह्माणं ईजिरे ... தேவர்கள் ப்ரம்ஹாவைப் பூஜித்தார்கள்.

### 6. लुट् (லுட்) = 1-வது எதிர்காலம்.

| | |
|---|---|
| अहं तण्डुलान् पक्ताहे | ... நான் அரிசிகளை சமைக்கப்போகிறேன். |
| आवां शाखादीन् पक्तास्वहे | ... (நா-இ.) கறிகாய் முதலானதுகளை சமைக்கப் போகிறோம். |
| वयं कूष्माण्डं पक्तास्महे | . .நாங்கள் பூஷணிக்காயை சமைக்கப்போகிறோம். |
| त्वं आचार्यं सेवितासे | ... நீ ஆசார்யனை ஸேவிக்கப்போகிறாய். |
| युवां मातापितरौ सेवितासाथे | ... நீ.-இ. தாய்தகப்பன்மார்களை ஸேவிக்கப் போகிறீர்கள். |
| यूयं प्रभून् सेविताध्वे | ... நீங்கள் தனிகர்களை ஸேவிக்கப்போகிறீர்கள். |
| बालकः मोदकैः मोदिता | ... பையன் தின்பண்டங்களால் ஸந்தோஷம் அடையப்போகிறான். |
| तौ सङ्गीतेन मोदितारौ | ... அவர்கள் இருவரும் பாட்டினால் ஸந்தோஷமடையப் போகிறார்கள். |
| ते फलभोजनात् मोदितारः | ... அவர்கள் பழங்களை சாப்பிடுவதால் ஸந்தோஷமடையப்போகிறார்கள். |

### 7. लृट् (லுருட்) = 2-வது எதிர்காலம்.

| | |
|---|---|
| अहं धनं आर्जयितुं यतिष्ये | ... நான் பணத்தை ஸம்பாதிப்பதற்கு யத்னம் செய்யப்போகிறேன். |
| आवां काशीं गन्तुं यतिष्यावहे | ... நா.இ. காசிக்குப் போக யத்னம் செய்யப்போகிறோம். |
| वयं यज्ञसंभारान् आहर्तुं यतिष्यामहे | ... நாங்கள் யாகஸாமான்களை சேகரிக்க யத்னம் செய்யப்போகிறோம். |
| त्वं पारितोषिकं लप्स्यसे | ... நீ ஸம்மானத்தை அடையப்போகிறாய். |
| युवां गुणवन्तौ पुत्रौ लप्स्येथे | ... நீ.-இ. குணவான்களான பிள்ளைகளை அடையப் போகிறீர்கள். |
| यूयं पुण्यलोकान् लप्स्यध्वे | ... நீங்கள் புண்யலோகங்களை அடையப்போகிறீர்கள். |
| सः विवाहं करिष्यते | ... அவன் கல்யாணத்தை செய்யப்போகிறான். |
| तौ सन्ध्यावन्दनकर्माणि करिष्येते | ... [அ.-இ.] ஸந்தியாவந்தனத்தை செய்யப்போகிறார்கள். |
| ते रङ्गनाथस्य नमस्कृतिं करिष्यन्ते | ... அவர்கள் ரங்கநாதருடைய நமஸ்காரத்தைச் செய்யப்போகிறார்கள். |

### 8. लृङ् (ல்ருங்) = ஈரட்டுக்காலம்.

| | |
|---|---|
| गुरून् असेविष्ये यदि सुखं अलप्स्ये | ... பெரியோர்களை நான் ஸேவிப்பேனாகில் சுகத்தை அடைவேன். |

| | |
|---|---|
| अधुना अयतिष्यावहि यदि अनन्तरं आमोदिष्यावहि | ... இப்பொழுது [நா-இ.] பிரயத்னம் செய்வோமாகில் பிறகு (நா-இ.) சந்தோஷப்படுவோம் |
| विषं आघ्रास्याम यदि अमृष्यामहि | ... விஷத்தை (நாங்கள்) மோந்துபார்ப்போமேயாகில் செத்துப்போய் விடுவோம். |
| तत् अक्षेप्स्यथाः यदि अहं त्वां अशप्स्ये | ... அதை (நீ) எறிவாய் ஆகில் நான் உன்னை சபிப்பேன். |
| तं अपालयिष्येथां यदि मोक्षं अलप्स्येथां | ... அவனை (நீ-இ.) காப்பாற்றுவீர்கள் ஆகில் மோக்ஷத்தை அடைவீர்கள். |
| फलानि अगणयिष्यध्वं यदि तानि ग्रामं आनेष्यध्वं | ... பழங்களை (நீங்கள்) எண்ணுவீர்களானல் அவைகளை கிராமத்திற்கு [தை] கொண்டு போகலாம். |
| वृत्तान्तं अप्रथयिष्यत यदि आह्लादं अजनिष्यत | ... ஸமாசாரத்தை [அவன்] வெளியிட்டானுகில் ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவான். |
| अचोरयिष्येतां यदि कारागृहं अपत्स्येतां | ... (அ-இ.) திருடுவார்களே ஆகில் சிறைச்சாலையை அடைவார்கள். |
| तेषां कष्टानि अकथयिष्यन्त यदि तेषां पितरः तान् अज्ञास्यन्त | .. அவர்களுடைய கஷ்டங்களை சொல்லிக்கொள்வாராகில் அவர்களுடைய தகப்பனுர்கள் அவைகளை அறிவார்கள். |

### 9. आशीर्लिङ् (ஆசீர் லிங்) = ஆசீர்வசனம்.

| | |
|---|---|
| अहं अमृतं नेषीय | ... நான் அமிர்தத்தைக் கொண்டுபோவேன். |
| आवां पुस्तकानि नेषीवहि | ... நா-இ. புஸ்தகங்களைக் கொண்டுபோவோம். |
| वयं यज्ञसंभारान् यागशालां नेषीमहि | ... நாங்கள் யாக சாமான்களை யாகசாலைக்குக் கொண்டுபோவோம். |
| त्वं सत्यं वक्षीष्ठाः | ... நீ உண்மையைச் சொல்லவேண்டும். |
| युवां अनृतं वाक्यं न वक्षीयास्थां | ... நீ-இ. பொய்ப்பேச்சை சொல்லவேண்டாம். |
| यूयं वेदमन्त्रान् वक्षीध्वं | ... நீங்கள் வேதமந்திரங்களைச் சொல்லவேணும். |
| नृपः देवान् यक्षीष्ट | ... அரசன் தேவர்களை பூஜை செய்யவேண்டும். |
| उभौ पार्वतीपरमेश्वरौ यक्षीयास्तं | ... இருவர் பார்வதீ-பரமேச்வரர்களைப் பூஜை செய்யவேண்டும். |
| सर्वे पुण्यभूमौ यक्षीरन् | ... எல்லோரும் பரிசுத்த பூமியில் யாகத்தைச் செய்யவேண்டும். |

### 10. लुङ् (லுங்) = ஒருவிதமான இறந்தகாலம்.

अहं भारं अवक्षि ... நான் சுமையைத் தூக்கினேன்.

आवां जल-कलशान् अवक्ष्वहि ... நா-இ. ஜலம் நிறைந்த குடங்களைத் தூக்கினோம்.

वयं काष्ठ-भारान् अवक्ष्महि ... நாங்கள் விறகு சுமைகளைத் தூக்கினோம்.

त्वं द्विज-श्रेष्ठान् अयष्ठाः ... நீ அந்தணசிரேஷ்டர்களைப் பூஜை செய்தாய்.

युवां कुत्र धूर्जटिं अयक्षाथां ... நீ-இ. சிவனை எங்கே பூஜை செய்தீர்கள் ?

यूयं लक्ष्मी-पतिं अयड्ढ्वं ... நீங்கள் மஹாவிஷ்ணுவை பூஜை செய்தீர்கள்.

सः ओदनं अपक्त ... அவன் அன்னத்தைச் சமைத்தான்.

नार्यौ मोदकान् अपक्षातां ...2 ஸ்திரீகள் தின்பண்டங்களைச் சமைத்தார்கள்.

सूदाः कूष्माण्डं अपक्षत ... சமையல்காரர்கள் பூஷணிக்காயை சமைத்தார்கள்.

---

### வினைகளின் நாலுவிதமான காலங்கள்.

गृहं त्यक्त्वा वनं गतः ...வீட்டை விட்டு காட் [டை] டுக்குப் போனான்.

शूरं हत्वा नगरं प्रविष्टौ .சூரனைக் கொன்று பட்டணம் [இருவர்] பிரவேசித்தார்கள்.

सर्पं दृष्ट्वा बालाः मुग्धाः ... பாம்பைப் பார்த்து பையன்கள் மயக்கமடைந்தார்கள்.

गृहं प्रविश्य मातरं अपृच्छत् ... வீட்டை அடைந்து தாயைக் கேட்டான்.

वनात् प्रतिनिवृत्य रामः राज्यं अपालयत् ... காட்டிலிருந்து திரும்பிவந்து ராமர் ராஜ்யத்தை ஆண்டார்.

पदे पदे विश्रम्य गृहं गच्छ ... அடிக்கடி இளைப்பாறிக்கொண்டு வீட்டுக்குப் [டை] போ.

स्नातुं नदीं गमिष्यामि ... ஸ்நானம் செய்ய நதி (யை) க்குப் போகப் போகிறேன்.

बालाः गृहं गन्तुं इच्छन्ति ... பிள்ளைகள் வீட் (டை) டுக்குப் போக ஆசைப் படுகிறார்கள்.

अश्वं आरोढुं मतिः जाता ... குதிரையை ஏற புத்தி உண்டாயிற்று.

इन्द्रः स्वयशः किन्नरमिथुनानि गापयामास … இந்திரன் தன் கீர்த்தியை கின்னரமிதுனங்களை கானம் பண்ணும்படி செய்தான்.

पुष्पमित्रः यजते … புஷ்பமித்ரன் யாகம் செய்கிறான்.

याजकौ तं याजयतः … 2 யாகம் செய்கிறவர்கள் அவனை யாகம் பண்ணும்படி செய்கிறார்கள்.

कृष्णवर्मा पुत्रेण ब्राह्मणेभ्य गाः दापयति … கிருஷ்ணவர்மன் பிள்ளையைக்கொண்டு பிராமணர்களுக்கு பசுக்களை கொடுக்கச்சொல்லுகிறான்.

रामः सीतां रमयति … ராமன் ஸீதையை ஆநந்தப்படுத்துகிறான்.

पिता पुत्रं गृहं गमयति … தகப்பன் பிள்ளையை வீட்டுக்குப் போகச்செய்கிறான்.

अधिकारिणा भूमिः मीयते … அதிகாரியால் பூமியானது அளக்கப்படுகிறது.

समुद्रस्य जलं न पीयते … சமுத்திரத்தினுடைய தண்ணீர் குடிக்கப்படுகிறதில்லை.

सेवकेन भारः उह्यते … வேலைக்காரனால் சுமை சுமக்கப்படுகிறது.

यूनां बुद्धिः शास्त्रैः संस्क्रियते … சிறுவர்களுடைய புத்தி சாஸ்திரங்களால் நன்றாக்கப்படுகிறது.

शठौ पुरुषैः ताड्येते 2 துஷ்டர்கள் மனிதர்களால் அடிக்கப்படுகிறார்கள்.

जनैः दृश्यन्ते … ஜனங்களால் பார்க்கப்படுகிறார்கள்.

भृत्यैः सेव्यसे … வேலைக்காரர்களால் நீ ஸேவிக்கப்படுகிறாய்.

पुत्राभ्यां पूज्येथे … 2 பிள்ளைகளால் (நீ-இ.) பூஜிக்கப்படுகிறீர்கள்.

व्याधिभिः पीड्यध्वे .. வியாதிகளால் தொந்திரவு செய்யப்படுகிறீர்கள்.

शोकेन दह्ये … விசனத்தினால் எறிக்கப்படுகிறேன்.

मित्रैः त्यज्यावहे . சிநேகிதர்களால் (நா-இ.) கைவிடப்படுகிறோம்.

भृत्यैः सेव्यामहे … வேலைக்காரர்களால் சிச்ரூஷை செய்யப்படுகிறோம்.

शिष्यः गुरोः गृहं जङ्गम्यते … சிஷ்யன் குருவினுடைய வீட்டுக்கு அடிக்கடி போகிறான்.

अद्भुतं वस्तु नगरे दरी दृश्यते … ஆச்சரியமான வஸ்து பட்டணத்தில் மிகவும் காணப்படுகிறது.

वयं गोदावरीं जिगमिषामः … நாங்கள் கோதாவரிக்குப்போக விரும்புகிறோம்

वयं रामस्य कैङ्कर्यं चिकीर्षामः … நாங்கள் ராமனுக்கு சிச்ரூஷையைச் செய்ய விரும்புகிறோம்.

| | |
|---|---|
| उज्जयिन्यां विक्रमादित्यः नाम राजा (निवसति स्म) | ... உஜ்ஜயினியில் விக்ரமாதித்யன் (என்று) பேரான அரசன் இருந்தான். |
| तस्य द्वौ पुत्रौ प्रतिदिनं (पठतः स्म) | ... அவனுடைய இரண்டு குமாரர்களும் தினந்தோறும் படித்துக்கொண்டு வந்தார்கள். |
| अटव्यां सिंहाः (अटन्ति स्म) | ... காட்டில் சிங்கங்கள் திரிந்துகொண்டிருந்தன. |
| | |
| स्वयंवरकाले सीतां लिप्सवः बहवः राजानः मिथिलां जग्मुः | ... கல்யாணகாலத்தில் ஸீதையை அடைய விரும்பின அனேக அரசர்கள் மிதிலாதேசத்திற்குப் போனார்கள். |
| प्रासाद-तलं आरुरुक्षुः सोपान-पङ्क्तिषु पदं निधत्ते | ... உப்பிரிகையில் ஏற விரும்பினவன் ஏணிப்படிகளில் காலை வைக்கிறான். |
| दुर्योधनं जिघांसुः भीमः युधिष्ठिरेण निवारितः | ... துர்யோதனனைக் கொல்ல விரும்பினவனான பீமன் யுதிஷ்டிரனால் தடுக்கப்பட்டான். |
| ब्राह्मणः बुभूषुः विश्वामित्रः उग्रं तपः चक्रे | ... அந்தணனாக ஆகவிரும்பினவனான விச்வாமித்ரன் கடினமான தபத்தைச் செய்தான். |
| | |
| वत्सौ ! आयुष्मन्तौ भवतम् | ... இரண்டு குழந்தைகளா ! தீர்க்காயுஸ் உள்ளவர்களாக இருங்கள். |
| रामः मूर्तिमान् धर्म इव आसीत् | ... ராமன் உருவை எடுத்துக்கொண்ட தர்மத்தைப் போல் இருந்தான். |
| खादन् अध्वानं न गच्छेत् | ... தின்றுகொண்டு வழியில் [யை] நடக்கக்கூடாது. |
| गुणवन्तः सुखेन भवन्ति | ... குணவான்கள் சுகத்தோடு இருக்கிறார்கள். |
| कर्तव्यं मया न कृतम् | ...செய்யத்தகுந்தது என்னால் செய்யப்படவில்லை |
| भोक्तव्यं न भुक्तम् | ... சாப்பிடத் தகுந்தது சாப்பிடப்படவில்லை. |
| द्रष्टव्यं न दृष्टम् | ... பார்க்கத் தகுந்தது பார்க்கப்படவில்லை. |
| श्रोतव्यं न श्रुतम् | ... கேட்கத் தகுந்தது கேட்கப்படவில்லை. |
| तस्मात् व्यर्थं मे जन्म | ... ஆகையால் வீண் [ஆய்விட்டது] என் பிறப்பு. |
| | |
| गोपः गां पयः दोग्धि | ... இடையன் மாட்டை பாலைக்கறக்கிறான். |
| विष्णुः बलिं वसुधां याचते | ... விஷ்ணு பலியை பூமியை யாசிக்கிறான். |
| पाचकः तण्डुलान् ओदनं पचति | ... சமயற்காரன் அரிசிகளை சாதம் சமைக்கிறான். |
| नृपः चोरं शतं दण्डयति | ...அரசன் கள்ளனை நூறு [அடிகள்] அடிக்கிறான். |

हरये भक्तिः रोचते ... ஹரிக்கு பக்தியானது பிரியமாய் இருக்கிறது.

भ्रमरः पुष्पेभ्यः स्पृहयति ... வண்டு புஷ்பங்களைப் பொருட்டு ஆசைப் படுகிறது.

रामः रावणाय क्रुध्यति ...ராமன் ராவணனைப்பொருட்டு கோபிக்கிறான்.

असुरः सुराय द्रुह्यति ... அசுரன் தேவனைப்பொருட்டு துரோகம் செய் கிறான்.

खलः साधवे असूयति .. துஷ்டன் நல்லவனைப்பொருட்டு பொறுமைப் படுகிறான்.

मुक्तये हरिं भजति ... மோக்ஷத்தைப்பொருட்டு ஹரியை ஸேவிக் [கிறான்.

---

कुम्भकारेण घटः कृतः ... குசவனால் சட்டி செய்யப்பட்டது.

हरिणा सर्पः दृष्टः ... ஹரியால் பாம்பு பார்க்கப்பட்டது.

---

दिनेषु गच्छत्सु नारायणः पण्डितः अभवत् ... நாள்கள் போன அளவில் நாராயணன் பண் டிதனாக ஆனான்.

महीं दशरथे शासति कः अविनयं आचरेत् ... பூமியை தசரதன் ஆளும் அளவில், எவன் கெடுதலைச் செய்வான் ?

आवयोः सतोः युष्माकं किं भयं ... நாங்கள் இருவரும் இருக்கிறபொழுது உங்க ளுக்கு என்ன பயம் ?

---

सः पादेन खञ्जः ... அவன் காலினால் நொண்டி.

देवदत्तः अक्ष्णा काणः ... தேவதத்தன் கண்ணினால் பொட்டை.

दशरथस्य पुत्रः नाम्ना रामः ... தசரதனுடைய பிள்ளை பேரால் ராமன்.

---

नमो देवेभ्यः ... தேவர்களுக்கு வந்தனம்.

स्वस्ति हरये ... க்ஷேமம் ஹரிக்கு.

पुत्रैः सह गच्छामि ... பிள்ளைகளோடு கூடப் போகிறேன்.

ब्राह्मणेभ्यः धनं यच्छति ... அந்தணர்களுக்கு பொருளைக் கொடுக்கிறான்.

---

| | |
|---|---|
| हरये नमः | ... ஹரியின்பொருட்டு நமஸ்காரம். |
| प्रजाभ्यः स्वस्ति | ... பிரஜைகளுக்கு க்ஷேமம். |
| नृपः चोरात् त्रायते | ... அரசன் கள்ளனிடமிருந்து ரக்ஷிக்கிறான். |
| ब्रह्मणः प्रजाः प्रजायन्ते | ... ப்ரும்மாவிடத்திலிருந்து ஜனங்கள் உண்டாகிறார்கள். |
| रामं विना दशरथः न जीवति | ... ராமனை இல்லாமல் தசரதன் ஜீவிக்கிறதில்லை. |
| जलं विना वृक्षः न प्ररोहति | ... தண்ணீரில்லாமல் மரம் வளருகிறதில்லை. |

॥ श्रीरस्तु ॥

# ॥ संस्कृत-तामिलमञ्जरी ॥

குறிப்பு :—(1) அடியில் **நாகர** வரிகளில் இந்த (  ) அடையாளத்திற்குள்ளடங்கிய பதங்களுக்கு அர்த்தம் சொல்லும்பொழுது அவைகளைச் சேர்த்து வாசிக்கவேண்டும்.

(2) அடியில் **தமிழ்** வரிகளில் இந்த [  ] அடையாளத்திற்கு முன் இருக்கிறபடி அர்த்தம் சொல்லவேண்டும். ஷை அடையாளத்திற்குள் இருக்கிறது ஸம்ஸ்கிருதத்தின் சொல்லர்த்தம் (அதாவது பதார்த்தம்).

## 1. विद्यायाः प्रभावम् ।

### கல்வியின் யோக்யதை.

काश्यां एकः विद्वान् आसीत् । तस्य
காசியில் ஒரு வித்வான் இருந்தார் [ன்.] அவருக்கு [அவனுக்கு]

(द्वौ कुमारौ) आस्ताम् । सः (ज्यायसे पुत्राय) (सर्वं
இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர் [அவன்] மூத்த பிள்ளைக்கு எல்லாப்

धनं) दत्वा, (कनीयांसं पुत्रं) सम्यक् विद्याः
பொருளையுங் கொடுத்து, இளய பிள்ளையை நன்ருக கல்விகளைக்

अशिक्षयत् । ज्यायान् (कतिपयैः दिवसैः एव) (सर्वं धनं)
கற்பித்தார் [ன்.] மூத்தவன் சில தினங்களிலேயே எல்லாப் பொருளையும்

व्ययित्वा दरिद्रः बभूव । कनीयान् स्वपाण्डित्येन
செலவு செய்துவிட்டு ஏழையாக ஆனான். சிறியவன் தன் கல்வித்தன்மையால்

(बहु धनं) संपाद्य सुखेन अवर्तत । अतः
அதிக பொருளைச் சம்பாதித்து சுகமாக இருந்தான். ஆகையால்

विद्यावान् सुखं लभते ।
கல்வியுடையவன் சுகத்தை அடைகிருன்.

## 2. ब्राह्मणस्य कुक्कुरस्य च कथा।

அந்தணனுடையவும் நாயினுடையவும் கதை.

कस्यचित् शूद्रस्य वशे कृष्णः एकः कुक्कुरः
ஒரு சூத்ரனுடைய வசத்தில் கறுப்பான ஒரு நாய்
आसीत्। "(इमं कुक्कुरं) श्वेतं करिष्यामि" इति सः
இருந்தது. "இந்த நாயை வெள்ளையாகச் செய்வேன்" என்று அவன்
आलोच्य, तं (नदीं नीत्वा) (बहून् दिवसान्)
எண்ணி அதை [அவனை] நதிக்குக் கொண்டுபோய் அநேக தினங்கள்
जलेन अक्षालयन् आसीत्। (तथा अपि) कुक्कुरः
ஜலத்தால் குளிப்பாட்டிக்கொண்டு இருந்தான். அப்படி இருந்தும் [அந்த] நாய்
श्वेतः (नैव=न+एव, बभूव)। अतः (असाध्यं कार्यं)
வெள்ளையாக ஆகவே இல்லை. ஆகையால் முடியாத காரியத்தைச்
साधयितुं (न यतेत)।
செய்துமுடிக்கப் பிரயத்தனப்படக்கூடாது.

## 3. दुष्टस्य वृश्चिकस्य कथा।

துஷ்டத்தேளின் கதை.

कश्चित् पुरुषः अग्नौ पतन्तं कंचित् वृश्चिकं
ஒரு மனிதன் நெருப்பில் விழுந்துகொண்டிருக்கிற ஒரு தேளைப்
दृष्ट्वा, "अस्य रक्षणेन मम पुण्यं भविष्यति"
பார்த்து, "இதனுடைய காப்பாற்றுதலால் எனக்குப் புண்யம் உண்டாகும்"
इति मत्वा, तं पतनात् वारयन् दधार। (सः
என்று எண்ணி, அதை [அவனை] விழுகிறதிலிருந்து தடுத்து, ரக்ஷித்தான். அந்தத்
वृश्चिकः) (तं उपकारं) (अविमृशन् एव) पुरुषस्य हस्तं
தேளானது அந்த உபகாரத்தை ஆலோசிக்காமலே, மனிதனுடைய கையைக்

अदशत् । तेन पुरुषः (महतीं व्यथां) अन्वभवत् ।
கடித்தது. அதனால் மனிதன் அதிகமான வலியை அனுபவித்தான்.

अतः दुष्टस्य उपकारः (न कर्तव्यः) ।
ஆகையால் துஷ்டனுக்கு உபகாரம் செய்யக்கூடாது.

---

## 4. भेकानां बालकानां च कथा ।

தவளைகளுடையவும் பையன்களுடையவும் கதை.

---

एकदा केचित् बालाः कस्यचित् सरसः तीरे
ஒரு காலத்தில் சில பையன்கள் ஒரு ஏரியின் கரையில்

मिलित्वा, जले लोष्ट-प्रक्षेपणेन क्रीडन्तः
கூடிக்கொண்டு தண்ணீரில் ஓடு எறிவதால் விளையாடிக்கொண்டிருக்கிறவர்களாக

आसन् । तस्मिन् सरसि स्थिताः (अनेके भेकाः) लोष्टैः
இருந்தார்கள். அந்த ஏரியில் இருந்த அனேக தவளைகள் ஓடுகளால்

अहन्यन्त । ते समेत्य अब्रुवन् । "किं
கொல்லப்பட்டன. அவைகள் கூடிச்சேர்ந்து சொல்லிக்கொண்டன : "என்ன

कुर्मः ? क्व गच्छामः ? कः नः त्राता भवेत् ?" इति ।
செய்வோம்? எங்கே போவோம்? யார் எங்களுக்கு ரக்ஷகனாக ஆவான்?" என்று

तेषु (एकः वृद्धः मण्डूकः) (तान् बालान्) इत्थं अवदत् ।
அவைகளில் ஒரு வயதான தவளை அந்தப் பையன்களை நோக்கி இவ்வாறு சொல்லிற்று

"भो बालकाः, किमर्थं निरपराधिनः अस्मान् हथ ?"
ஓ பையன்களா, எதற்காக குற்றமற்ற எங்களைக் கொல்லுகிறீர்கள்?"

"वयं युष्मान् (न हन्मः) ; किंतु, लोष्टैः क्रीडामः" इति
நாங்கள் உங்களைக் கொல்லவில்லை, ஆனால் ஓடுகளால் விளையாடுகிறோம்" என்று

ते प्रत्यब्रुवन् । सः अवदत् । "इयं
அவர்கள் பதில் சொன்னார்கள். அது [அவன்] சொல்லிற்று [சொன்னான்]: "இது [இவன்]

भवतां क्रीडा एव । (अस्माकं तु) प्राणहानिः" इति । तस्मात्
உங்களுக்கு விளையாட்டு தான். எங்களுக்கோ உயிர்ச் சேதம்" என்று. ஆகையால

विनोदार्थं अपि हिंसाकरं कर्म (न कर्तव्यम्) ।
விளையாட்டுக்காகிலுங் கூட துன்பத்தைக் கொடுக்கும்படியான காரியம் செய்யத்தகுந்ததல்ல.

---

# 5. गुरु-शुश्रूषा ।

## குரு ஸேவை

आसीत् वाराणस्यां कश्चन ब्रह्मचारी रामचन्द्र-नामकः ।
இருந்தார் [ன்] காசியில் ஒரு பிரும்ஹசாரி ராமச்சந்திரன் என்று பெயருடையவன்.

सः कदाचित् वेदान् अधीतुं कंचन (ब्राह्मणं गुरुं)
அவன் ஒரு நாள் வேதங்களைப் படிக்க ஒரு அந்தண குருவை

प्राप । (सः गुरुः) शिष्यस्य गुणान् ज्ञातुं वेदं
அடைந்தான். அந்த குரு சிஷனுடைய குணங்களைத் தெரிந்துகொள்ள வேதத்தைச்

(अनुपदिशन् एव) विंशति संवत्सरान् (यापयति स्म) । अथ
சொல்லிக்கொடுக்காமலே இருபது வருஷங்களைக் கழித்தார். பிறகு

कदाचित् (सः गुरुः) शिष्यं क्षेत्रवाहिनीं कुल्यां निरोद्धुं
ஒரு நாள் அந்த குருவானவர் சிஷனை வயலுக்குப்போகும்படியான கண்ணி வாய்க்காலை அடைக்க

प्रेषयामास । सः शिष्यः अनायुधः गत्वा तां नियन्तुं अशक्तः
அனுப்பினார். அந்த சிஷன் ஆயுதமில்லாமற் போய் அதை [அவளை] அடைக்க முடியாதவனாகி

तस्यां (स्वयं एव) तिर्यक् अशेत । गुरुः चिरकालं
அதில் [அவளில்] தானே குறுக்கே படுத்துக்கொண்டான். குரு அதிகநேரம்

अनागतं शिष्यं अन्विष्यन्, (तं एव) देशं प्राप ।
வராமலிருந்த சிஷனைத் தேடிக்கொண்டு அதே இடத்தை அடைந்தார் [ன்].

तदा कुल्यायां तिर्यक् शयानं अन्तेवासिनं दृष्ट्वा
அப்பொழுது வாய்க்காலிற் குறுக்கே படுத்துக்கொண்டிருக்கும் சிஷனைக் கண்டு,

कृपालुः अवदत् । "यावत् मम विद्या,
தயவுடையவரா (னா)ய்ச் சொன்னார் (ன்): "எவ்வளவு என்னுடைய கல்வியோ

तावत् ते भूयात्" इति । (तथा एव) शिष्यः
அவ்வளவு உனக்கு உண்டாகட்டும்" என்று. அப்படியே சிஷன்

सकल-विद्या-पारंगतः अभूत् । तस्मात् गुरु-शुश्रूषया
எல்லா வித்தையிலும் கரைகண்டவனாக ஆனான். ஆகையால் குருவை ஸேவிப்பதால்

सर्व-विद्याः लभ्यन्ते ।
எல்லாக் கல்விகளும் அடையப்படுகின்றன.

# 6. अनृतवादिनो बालकस्य कथा ।

**போய்சோன்ன பையனுடைய கதை.**

आसीत् कस्मिंश्चित् अग्रहारे कश्चित् ब्राह्मणः ।
இருந்தான் ஒரு கிராமத்தில் ஒரு அந்தணன்.

तस्य एकः कुमारः आस्त । (सः द्विजः) कदाचित्
அவருக்கு [னுக்கு] ஒரு பிள்ளை இருந்தான். அந்த அந்தணன் ஒரு காலத்தில்

(तेन कुमारेण सह) काशीं गन्तुं प्रतस्थे । मध्येमार्गे (सः बालः)
அந்தப் பையனோடு கூட காசியை அடைய புறப்பட்டான். நடுவழியில் அந்தப் பையன்

"तात, व्याघ्र आगच्छति, व्याघ्रः आगच्छति" इति (मृषा एव)
"அப்பா புலி வருகிறது, புலி வருகிறது" என்று பொய்யாகவே

अक्रन्दत् । तदा, (सः ब्राह्मणः) परावृत्य अपश्यत् । तत्र
அழுதான். அப்பொழுது, அந்த அந்தணன் திரும்பி பார்த்தான். அவ்விடத்தில்

व्याघ्रः (नैव आसीत्) । ततः पुरस्तात् किञ्चित् दूरं (पितरि
புலி இருக்கவே இல்லை. பிறகு முன்னால் கொஞ்ச தூரம் தகப்பன்

गते) साक्षात् शार्दूलः आगतः। अथ (सः बालः) (तं शार्दूलं)
போன அளவில் நிஜமாகப் புலி வந்தது. பிறகு அந்தப் பையன் அந்தப் புலியைப்

दृष्ट्वा, भयोद्विग्नमना, "तात, शार्दूलः शार्दूलः" इति पुनःपुनः
பார்த்து, பயத்தால் நடுங்கின மனதையுடையவனாய் "அப்பா, புலி புலி" என்று அடிக்கடி

अक्रोशत् । "अयं (पुरा इव) मृषा वदति" इति मत्वा,
அழுதான். "இவன் முன் போல் பொய் சொல்லுகிறான்" என்று எண்ணி

(अपरावर्तमानः एव) (पितरि गच्छति) व्याघ्रः आगत्य पृष्ठतः गच्छन्तं
திரும்பிப்பார்க்காமலே தகப்பன் போன அளவில் புலி வந்து பின்னாலே போய்க்கொண்டிருக்கிற

(तं बालं) अपाहरत् । तस्मात् अनृतवादिभिः
அந்தப் பையனைக் கொண்டுபோய்விட்டது. ஆகையால் பொய் சொல்வோர்களால்

(कदाचित्) सत्यं (उक्तं अपि) जनः (न प्रतीयात्) ।
ஒரு சமயம் மெய் சொல்லப்பட்டாலும் உலகமானது நம்பமாட்டாது.

## 7. ब्राह्मण्याः नकुलस्य च कथा ।

ப்ராம்ஹணஸ்திரீயுடையவும் கீரியுடையவும் கதை.

चोलदेशे (सुशीलः नाम) ब्राह्मणः आसीत् । स च
சோளதேசத்தில் ஸுசீலன் என பெயருடைய அந்தணன் இருந்தார் [ன்] அவரு[னு]ம்

(एकं नकुलं) अपोषयत् । सः कदाचित् प्रातः उत्थाय शालेय-
ஒரு கீரியை வளர்த்தார் [ன்]. அவர்[ன்] ஒரு நாள் காலையில் எழுந்து நெல்லுள்ள

क्षेत्र-दर्शनाय बहिः जगाम । ततः तत्पत्नी स्वाऽपत्यं
வயலைப்பார்க்கிறதற்காக வெளியே போனார்[ன்]. பிறகு அவர் மனைவி தன் குழந்தையை

डोलायां शाययित्वा, नकुलं (तन्निकटे) स्थापयित्वा
தொட்டிலில் படுக்கவைத்துவிட்டுக் கீரியை அதன் சமீபத்தில் இருக்கச்செய்துவிட்டுக்

स्नातुं तडागं अगच्छत् । तावत् कश्चित् सर्पः
குளிக்க நதிக்கு [நதியை] போனாள். அதற்குள் ஒரு பாம்பு

तद्डोला - समीपं आययौ । तदा (सः नकुलः) (तं सर्पं)
அந்தத் தொட்டிலுக்கு அருகில் வந்தது. அப்பொழுது அந்தக் கீரி அந்தப் பாம்பைத்

खण्डशः छित्वा, रक्तसिक्ताङ्गः तां अभिययौ ।
துண்டாக துண்டித்து, இரத்தத்தினால் நனைக்கப்பட்ட அவயவங்களை உடையதாய்க்கொண்டு அந்தம்மாளைச் சந்திப்பதற்குப் போயிற்று.

सा तं दृष्ट्वा, "अयं मम शिशुं
அந்தம்மாள் [அவள்] அதை [அவனை] பார்த்து, "இது [இவன்] என் குழந்தையைத்

अच्छिनत्" इति रुषा, दण्डेन तं अताडयत् । सः
துண்டித்தது" என்று கோபத்தால் தடியால் அதை [அவனை] அடித்தாள். அது [அவன்]

अम्रियत । ततः सा स्व-भवनं आगत्य, डोलायां सुखेन
செத்துப்போய்விட்டது பிறகு அவள் தன் வீட்டை அடைந்து, தொட்டிலில் சுகத்துடன்

स्वपन्तं बालकं, अधस्तात् नकुलेन खण्डितं (अहिं च), वीक्ष्य,
தூங்கிக் கொண்டிருக்கிற பையனையும் கீழே கீரியால் துண்டிக்கசப்பட்ட பாம்பையும், பார்த்து,

"अहो महा-पापिनी अहं, शिशुरक्षिणं उरगघ्नं
"ஐயோ பெரிய பாபி நான், குழந்தையைக் காப்பாற்றின(தும்) பாம்பைக்கொன்றதும்

मम भर्त्रा पुत्रवत् रक्षितं अनपराधिनं
என் புருஷனால் பிள்ளையைப் போல் காப்பாற்றப்பட்டதும் குற்றவாளியல்லாததும் ஆன

नकुलं, समहरं" इति शुशोच । तस्मात् अविमृश्य
கீரியைக் கொன்றேன்" என்று விசனப்பட்டாள். ஆகையால் ஆலோசிக்காமல்

कारिणां (एवं - विधानि पापानि) संभवन्ति ।
செய்வோர்களுக்கு இவ்விதங்களான பாபங்கள் நேரிடுகின்றன.

# 8. ऐक्यस्य महिमा।

## ஒற்றுமையின் மஹிமை.

मालव-देशे कश्चित् ब्राह्मणः अवसत्। तस्य
மாளவ தேசத்தில் ஒரு ப்ராம்ஹணன் இருந்தார் [ன்]. அவரு [னு] டைய

पुत्राः असकृत् परस्परं कलहायमानाः
பிள்ளைகள் அடிக்கடி ஒருவரோடொருவர் சண்டைசெய்துகொள்ளுகிறவர்களாக

अभवन्। तान् (कलहं विना) स्निग्धान् कर्तुं बहुधा
இருந்தார்கள். அவர்களைச் சண்டை இல்லாமல் நேசமுள்ளவர்களாகச் செய்ய பலவிதமாக

यतमानेन अपि (तेन ब्राह्मणेन) (किञ्चित्फलं अपि) न लब्धम्।
முயன்றும் அந்த ப்ராம்ஹணனால் சிறிது பயன் கூட அடையப்படவில்லை.

अथ सः चिरं संचिन्त्य (एकस्मिन् दिवसे) स्वस्य पुत्रान्
பிறகு அவர் [ன்] அதிககாலம் நன்றாக யோஜித்து ஒரு தினத்தில் தன் பிள்ளைகளைக்

आहूय (एकं काष्ठ-भारं) अनेतुं आज्ञां अदिशत्। आनयनानन्तरं
கூப்பிட்டு ஒரு விறகுகட்டைக் கொண்டுவர உத்திரவைக் கொடுத்தான். கொண்டுவந்தபின்

(सः ब्राह्मणः) (ज्येष्ठं पुत्रं) आहूय "रे, त्वं (एतं काष्ठ-भारं)
அந்த அந்தணன் மூத்த பையனைக் கூப்பிட்டு "அடா, நீ இந்த விறகுகட்டை

भङ्क्तुं यावत् शक्यं तावत् यतस्व" इति आज्ञां अदिशत्।
உடைக்க எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயலு" என்று உத்திரவைக் கொடுத்தான்.

ततः तथा यतमानं तं च (तथा एव) एकशः (यतमानान्
பிறகு அப்படி முயற்சி செய்யும் அவனையும் அப்படியே ஒவ்வொருவனாக முயலுகிற

अन्यान् च) भुञ्जने अशक्तान् दृष्ट्वा, (तं काष्ठ - भारं)
மற்றவர்களையும் ஒடிப்பதில் சக்தியில்லாதவர்களாக பார்த்து, அந்த விறகு கட்டை இருப்பதைப்

शिथिलीकृत्य तेभ्यः (एकैकं काष्ठं) दत्वा, एवं अवदत्।
அவிழ்த்து அவர்களுக்கு ஒவ்வொரு விறகைக் கொடுத்து இவ்வாறு சொன்னான்:

"इदानीं एतत् भङ्क्तुं यूयं यतध्वम्" इति। एतत्
"இப்பொழுது இதை உடைக்க நீங்கள் யத்னம் செய்யுங்கள்" என்று. இது

तैः अनायासेन कृतम्। अथ जनकः मूढान्
அவர்களால் சிரமம் இல்லாமல் செய்யப்பட்டது. பிறகு தகப்பன் மூடர்களான

तान् आलोक्य, "बालाः, ऐक्यस्य प्रभावं पश्यत।
அவர்களைப் பார்த்து, "பையன்களா, ஒற்றுமையினுடைய ப்ரபாவத்தைப் பாருங்கள்.

यूयं इतःपरं कलहं त्यजत। परस्परं स्निग्धाः भवत।
நீங்கள் இனிமேல் கலகத்தை விடுங்கள். ஒருவர்க்கொருவர் ஸ்னேகிதர்களாக இருங்கள்.

तथा चेत् युष्मान् जेतुं कोऽपि [कः+अपि] शक्तः
அப்படி இருந்தால் உங்களை ஜயிக்க எவனும் சக்தியுள்ளவனாக

(न भवति)" इति आलपत्। तेऽपि [ते अपि] जनकस्य
இருக்கமாட்டான்" என்று சொன்னான். அவர்களும் தகப்பனுடைய

अनुशासनेन कलहं विहाय, परस्परं स्निग्धाः अभवन्।
உத்திரவால் சண்டையை விட்டு ஒருவருக்கொருவர் ஸ்னேகிதர்களாக இருந்தார்கள்.

---

## 9. गजः।

யானை.

गजः (सर्वेषु मृगेषु अपि) महान्। अयं राज्ञां
யானை எல்லா ஜந்துக்களில் உம் பெரியது. இது [இவன்] அரசர்களுக்கு

अत्यन्तोपयुक्तः। (सर्वेभ्यः प्राणिभ्यः) बलशाली। राजानः एनं
அதிக உபகாரமுள்ளது. ஸகல பிராணிகளை விட பலசாலி. அரசர்கள் இதை [இவனை]

विशेष-दिवसेषु अलंकुर्वन्ति, पूजयन्ति च।
விசேஷ தினங்களில் சிங்காரம் செய்கிறார்கள், பூஜிக்கவும் செய்கிறார்கள்.

उत्सव-कालेषु गज-पृष्ठे पल्याणं आस्तीर्य, तदुपरि
உத்ஸவகாலங்களில் யானைகளின் முதுகில் மெத்தையை விரித்து அதின்பேரில்

रत्न-मण्डपं अथवा सुवर्ण-मण्डपं आहोस्वित् रजत-मण्डपं
ரத்னமண்டபத்தை அல்லது தங்கமண்டபத்தை அல்லது வெள்ளிமண்டபத்தை

संस्थाप्य तन्मध्ये उपविश्य वीथ्यां आगच्छन्ति।
வைத்து, அதின் நடுவில் உட்கார்ந்துகொண்டு தெருவில் வருகிறார்கள்.

गजानां दन्तेन (नाना-विधानि वस्तूनि) निर्मीयन्ते।
யானைகளுடைய பல்லால் அநேக விதங்களான வஸ்துக்கள் செய்யப்படுகின்றன.

---

# 10. कश्चन चोरः ।

**ஒரு கள்ளன்.**

एकदा कश्चन चोरः नारिकेल-फलं अपहर्तुं कस्यचित्
ஒரு நாள் ஒரு கள்ளன் தேங்காயை எடுத்துப்போக ஒருவனுடைய

गृहारामं (गृह + आरामं) प्रविश्य नारिकेल-तरुं आरुक्षत् ।
வீட்டுத் தோட்டத்தை அடைந்து தென்னமரத்தில் [தை] ஏறினான்.

(तस्मिन् आरोहति) आराम-स्वामी आरामं आगच्छत् ।
அவன் ஏறுமளவில் தோட்டத்தின் சொந்தக்காரன் தோட்டத்திற்கு வந்தான்.
[தோட்டத்தை] [அடைந்தான்.]

तं दृष्ट्वा, चोरः फलं (अनपचित्य एव) वृक्षात्
அவனைப் பார்த்து, கள்ளன் காயைப் பறிக்காமலே மரத்திலிருந்து

अवातरत् । आराम-स्वामी वृक्षात् अवरोहन्तं चोरं
இறங்கினான். தோட்டத்தின் சொந்தக்காரன் மரத்திலிருந்து இறங்குகிற கள்ளனைப்

दृष्ट्वा, "रे! किमर्थं वृक्षे आरुक्षः?" इति अपृच्छत् ।
பார்த்து, "அடே! எதற்காக மரத்தில் [தை] ஏறினாய்?" என்று கேட்டான்.

चोरः तं प्रत्यवोचत् : "वत्साय तृणानि
கள்ளன் அவனுக்கு [னை] பதில் சொன்னான் : "கன்றுக்குட்டிக்கு புல்லுகளைப்

उत्पाटयितुं वृक्षं आरुक्षं" इति । तत् आकर्ण्य, आराम-स्वामी
பிடுங்க மரத்தில் (தை) ஏறினேன்" என்று, அதைக் கேட்டுத் தோட்டக்காரன்

तं अब्रवीत् : "रे, (भूमौ एव) तृणानि प्ररूढानि
அவனிடம் [னை] சொன்னான் : "அடே, பூமியிலேயே புல்கள் முளைத்தவைகளாக

सन्ति ; नालिकेर-तरौ तृणानि (रोहन्ति किम्?) इति ।
இருக்கின்றன ; தென்னைமரத்தில் புல்கள் முளைக்குமா என்ன?" என்று.

चोरः प्रत्यभाषत : "वृक्षे तृणाभावात् (तृण + अभावात्) एव
கள்ளன் பதில் சொன்னான் : "மரத்தில் புல் இல்லாதபடியால் தான்

अवरोहामि" इति । तत् श्रुत्वा, आराम-स्वामी तूष्णीं बभूव ।
இறங்குகிறேன்" என்று. அதைக் கேட்டுத் தோட்டக்காரன் பேசாமல் இருந்தான்.

चोरस्तु (चोरः + तु) अवरुह्य यथागतं अयासीत् ॥
கள்ளனோ என்றால் இறங்கி வந்தபடி போனான்.

# 11. कश्चन पान्थः ।

### ஒரு வழிப்போக்கன்.

---

एकदा अध्वश्रान्तः कश्चन पान्थः मार्ग-समीप-वर्तिनः
ஒருநாள் வழிநடையால் களைத்தவனான ஒரு வழிப்போக்கன் வழியினருகிலிருக்கிற

कस्यचित् वट-वृक्षयस्य छायायां अशयिष्ट । सः भूमौ
ஒரு ஆலமரத்தின் நிழலில் படுத்துக்கொண்டான். அவன் பூமியில்

(शयान एव) पक्क-फल-भरितं (तं वृक्षं) विलोक्य, मनसि
படுத்துக்கொண்டே கனிந்த பழங்களோடு கூடிய அந்த மரத்தைப் பார்த்து, மனதில்

एवं अचिन्तयत् : "शाखोपशाखाभिः उपेतस्य महतः
இவ்வாறு நினைத்தான்: " கொம்புகளுக்குமேல் கொம்புகளாற் கூடின பெரிதான

अस्य वृक्षस्य फलानि कियन्ति अल्पानि ! (भूमौ एव)
இந்த மரத்தின் பழங்கள் எவ்வளவு சிறியவை! பூமியிலேயே

प्रसरण-शीलायाः सकृत् पादाभिघातेन अपि म्लानिं
பரவுகிற ஸ்வபாவமானதும் ஒரு தடவை காலின் அடியாற் கூட வாட்டத்தை

उपगच्छन्त्याः कूष्माण्ड-लतायाः फलानि कियन्ति स्थूलानि !
அடைகிறதும் ஆன பூஷணிக் கொடியின் காய்கள் எவ்வளவு பெரியவை!

सर्वज्ञः सर्वशक्तिमान् ईश्वरः कश्चन अस्ति । (तेन एव)
எல்லாம் தெரிந்த எல்லா சக்தியுள்ள ஸ்வாமி ஒருவர் [ன்] இருக்கிறார் [ன்]. அவராலேயே

इदं जगत् सृष्टं इति जनाः वदन्ति । सर्वज्ञः
இந்த , உலகம் படைக்கப்பட்டது என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். எல்லாம் தெரிந்த

कश्चन भगवान् अस्ति चेत्, तर्हि तेन वृक्ष-लतादीनां
ஒரு பகவான் இருப்பார் ஆகில், அப்பொழுது அவரால் மரம், கொடி முதலா
[ன்] [னால்] னவைகளுக்கு

तत्तत् आकारानुगुणं एव फलादिकं सृष्टं भवेत् ।
அததின் ஸ்வரூபத்திற்கு ஸரியாகவே காய் முதலானது ஸ்ருஷ்டிககப்பட்டு இருக்கும்.

महतः वृक्षस्य क्षुद्रं फलम् ; क्षुद्रायाः लतायाः महत्फलं स्रष्टुं
பெரிய மரத்திற்குச் சிறிய காய்; சிறிய கொடிக்குப் பெரிய காய் உண்டுசெய்ய

स (किं मूढः) ? एतावत् अपि स किं (न जानाति) ?
அவர் தெரியாதவரா ? இதுவரையிலும் கூட அவர் ஏன் அறியவில்லை ?
[ன்] [ன] [ன்]

अतः (ईश्वरः एव) नास्ति इति मम मतिः" इति। एवं
ஆகையால் ஈச்வரனே இல்லை என்று என் அபிப்ராயம்" என்று. இவ்வாறு
(तस्मिन् चिन्तयति), वात-प्रचालितायाः कस्याश्चन शाखायाः
அவன் ஆலோசிக்கும்பொழுது காற்றினால் அசைக்கப்பட்ட ஒரு கொம்பிலிருந்து
एकं फलं प्रभ्रश्य तस्य भ्रूप्रदेशे न्यपतत्। सः तत्क्षणं
ஒரு காய் நழுவி அவனுடைய புருவத்தில் விழுந்தது. அவன் அதே நிமிஷத்தில்
उत्थाय करेण भ्रुवं परिमृजन् पुनः चिन्तितवान् :
எழுந்து கையால் புருவத்தைத் துடைத்துக்கொண்டு மறுபடியும் ஆலோசனை செய்தவனானான் :
"अल्प-फल-पतनात् एव मम (कापि क्षतिः) (न उत्पन्ना)।
"சிறிய காய் விழுந்ததினாலே தான் எனக்கு ஒரு வலியும் உண்டாகவில்லை.
कूष्माण्ड-फल-सदृशं फलं (पतितं यदि स्यात्), तदा मम
பூஷணிக்காயைப் போலுள்ள காய் விழுந்ததே ஆனால், அப்பொழுது என்
(शिर एव) भिन्नं भवेत्। अतः अहं एव मूढः।
தலையே உடைந்ததாக ஆயிருக்கும். ஆகையால் நான் தான் மூடன்.
यस्मात् अहं (ईश्वर एव) नास्ति, सः वृक्ष-लताद्याकारानुगुणं
எதனால் நான் ஈச்வரனே இல்லை, அவர் [ன்]
(वृक्ष + लता + आदि + आकार + अनुगुणं) फलं (न अस्राक्षीत्)
மரம் கொடி இவைகளுடைய உருவுக்குச் சரியான பழத்தை உண்டாக்கவில்லை
इति अमंसि" इति।
என்று எண்ணினேன்" என்று.

P15

N16

---

## 12. अपकारस्य फलम्

அபகாரத்தினால் விளையும் தீங்கு.

---

गोविन्द-नामा द्वादश-वर्षः कोऽपि बालः स्नानार्थं नदीं प्रस्थितः।
கோவிந்தன் என்று பெயருடைய பன்னிரண்டு வயதுள்ள ஒரு பையன் குளிக்க வேண்டியதற்காக ஆற்றுக்குப் [றை] போனான்.
मार्ग-मध्ये कमपि सर्पं अवालोकयत्। स च एनं दृष्ट्वा पलायितुं
வழிநடுவில் ஒரு பாம்பைக் கண்டான். அதுவும் [அவனும்] இவனைக் கண்டு ஓடத்

आरभत । तदा धृष्टः दुष्टश्च गोविन्दः तस्य उपरि
துடங்கிற்று. அப்பொழுது தைர்ய துஷ்டனும் கோவிந்தன் அதின் மேல்
முள்ளவனும் ஆன [அவனுடைய]

(पाषाण-खण्डं एकं) प्राक्षिपत् । तत् च दैव-वशात् लक्ष्यात्
கல்துண்டம் ஒன்றை எறிந்தான். அதுவும் அதிருஷ்டத்தால் குறிப்பிலிருந்து

अपरद्धं अभवत्। तत् (जानन् अपि) सर्पः भयात् (अपरावर्तमान एव)
தவறினதாக ஆயிற்று. அதைத் தெரிந்தும், பாம்பு பயத்தால் திரும்பாமலே

(पलायते स्म) । अथ गोविन्दः पुनर् अपि (शिला-खण्डं एकं)
ஓடிற்று. பிறகு கோவிந்தன் மறுபடியும் கல்துண்டு ஒன்றை

प्रक्षिप्तवान्। तेन प्रहृतः क्रोधं आविशन् निवृत्य, हन्त,
எறிந்தான். அதனால் அடிக்கப்பட்டதாய் கோபத்தை அடைந்து திரும்பி, ஐயோ,
[எறிந்தவனானன்.] [வனாய்]

गोविन्दं अदशत् । (दष्ट-मात्र एव), सञ्जात-भय गोविन्दः
கோவிந்தனைக் கடித்தது. கடிக்கப்பட்டவுடனேயே, உண்டான பயத்துடன் கோவிந்தன்

सर्प-दष्टं आत्मानं उद्घोषयन् सत्वरं गृहं प्रधावितः। विषवेगेन च
பாம்பால் தன்னை உரத்திக் வேகமாக வீட்டுக்கு ஓடிப்போனான். விஷவேகத்
கடிக்கப்பட்டவனாக கத்திக்கொண்டு [வீட்டை] தால் உம்

मूर्च्छितः जातः। अत्रान्तरे कोऽपि मान्त्रिकः यदृच्छया तत्र
மூர்ச்சை அடைந்தவனாக ஆனான். இச்சமயத்தில் ஒரு மந்திரவாதி திடீரென்று அவ்விடம்

आजगाम । (स च) तत्रत्यैः प्रार्थितः प्राङ्-मुखः भूत्वा,
வந்தான். அவன் உம் அவ்விட கேட்டுக்கொள்ளப் கிழக்குமுகமாய் இருந்து,
மிருந்தவர்களால் பட்டவனாய்

यथा-विधि गारुड-मन्त्रं अजपत् । क्रमेण भगवान्
சாஸ்த்ரப்படி கருட மந்திரத்தை ஜபித்தான். வரவர மஹிமை தங்கிய

गरुडः प्रसन्नः । विषवेगः च शान्तः । दिष्ट्या च गोविन्दः
கருடன் ப்ரஸன்னமானார். விஷத்தின் குறைந்தது. அதிருஷ்டத்தால் கோவிந்தன்
[ன்] கடுமையும் [உம்]

निर्मोहः स्वस्थः बभूव । ततः अपकारः (न कर्तव्यः) ॥
மயக்கம் சுகமுள்ளவனாக ஆனான் ஆகையால் அபகாரமானது செய்யவே கூடாது.
தெளிந்து

---

# 13. धार्मिकता ।

தர்மத்தன்மை.

---

उज्जयिन्यां विक्रमः नाम धार्मिकः भूपालः बभूव ।
உஜ்ஜயினியில் விக்ரமன் என்று பெயரான தர்மிஷ்டனான அரசன் இருந்தான்.
तस्य धार्मिकतां परीक्षितुं सुरभि महीं आजगाम ।
அவனுடைய தர்மசீலத்தை பரீக்ஷை காமதேனு பூலோகத்துக்கு வந்தாள்.
செய்ய வானவள் [தை] [அடைந்தாள்].
आगत्य च, कुत्रापि तदागमनमार्गे (तत् + आगमन + मार्गे)
வந்து [உம்], ஒரு இடத்தில் அவள் வரும் வழியில்
(दुर्बला सती) महति पङ्के मग्ना परमं विषादं अभिनयन्ती
பலமில்லாதவளாகி அதிக சேற்றில் முழுகி அதிக வ்யஸனத்தைக் காட்டிக்கொண்டு
स्थिता। (विक्रमः अपि) तां आलोक्य (जात-करुणः) सद्यः पङ्कं
நின்றாள். விக்ரமனும் அவளைப் பார்த்து தயவுண்டானவனாக உடனே சேற்றில்
अवगाह्य स्वयमेव तां पङ्कात् आकृष्य तीरं आनयत् ।
இறங்கி தானே அவளை சேற்றிலிருந்து இழுத்துக் கரையைச சேர்த்தான்.
अथ च (शुद्धैः जलैः) प्रक्षाल्य घास-मुष्टिं दत्वा कण्डूयनादिभिः
பிறகு (உம்) சுத்தமான அலம்பி ஒரு பிடி கொடுத்து சொறிந்துகொடுக்கிறது
ஜலங்களால் புல்லைக் முதலானவைகளால்
उपाचरत् । ततः तस्य अव्याज-करुणया प्रीता सा
உபசாரம் பிறகு அவனுடைய பாசாங்கம் செய்யாத ப்ரியப்பட்டவளாய் அவள்
செய்தான். [ஸ்வபாவமான] தயவினால்
तं आलोक्य आह : "भो धार्मिक, अहं किल सुरभिः ।
அவனைப் பார்த்து சொன்னாள் : "ஓ தர்மசிந்தையுள்ளவனே, நானே காமதேனு.
तव धार्मिकतां परीक्षितुं स्वर्गात् भुवनं आगता ।
உன் தர்மகுணத்தைப் பரீக்ஷிப்பதற்காக ஸ்வர்க்கத்திலிருந்து பூமியை அடைந்தேன்.
अनया तव परोपकार-दीक्षया परं तुष्टास्मि । वाञ्छितं वरं
இந்த உன் பரோபகார முழ்மரத்தினால் அதிகமாக ஸந்தோஷப் ஆசைப்பட்ட வரத்
[இதனால்] பட்டவளாக ஆகிறேன். தை
प्रार्थय" इति। अनन्तरं विक्रमः तां प्रणम्य, "भगवति,
வேண்டிக் என்று. பிறகு விக்ரமன் அவளை நமஸ்காரம் செய்து, "மஹிமை
கொள்" தங்கியவளே

तुष्टा असि यदि, तत् अद्य आरभ्य मम गृहे वस्तुं
ஸந்தோஷப் இருக்கிறாய் என்றால், அப்பொழுது இன்று முதல் என் வீட்டில் வஸிக்க பட்டவளாய்

अर्हसि" इति प्रार्थयत्। सा (कामधेनुः अपि),
தகுந்தவளாய் இருக்கிறாய்" என்று ப்ரார்த்தித்தான். அந்த காமதேனு வும்,

"तथा" इति उक्त्वा, तदा-प्रभृति तदीया भूत्वा, तस्य
"அப்படியே" என்று சொல்லி, அன்று முதல் அவனுடையதாக ஆகி, அவனுடைய

गृहे न्यवसत्॥
வீட்டில் வஸித்தாள்.

---

## 14. शुकानां वानराणां च कथा।

கிளிகளினுடையவும் குரங்குகளுடையவும் கதை.

---

केचन शुकाः (कस्यचित् वृक्षस्य) शाखासु (कृतेषु कुलायेषु
சில கிளிகள் ஒரு மரத்தின் கொம்புகளில் செய்யப்பட்ட கூடுகளில்

वसन्ति स्म। एकदा महती वृष्टिः सञ्जाता। केचन वानराः
வஸித்தன. ஒருநாள் பெரிய மழை உண்டானது. சில குரங்குகள்

वृष्टि-बाधां असहमानाः (तं वृक्षं एव) अभजन्त। तान्
மழை தொந்திரவை ஸஹிக்கமுடியாமல் அந்த மரத்தையே அடைந்தன. அவைகளைப்

दृष्ट्वा, सकरुणं शुकाः वदन्ति स्म: "वयं चंचुभिः कुलायान्
பார்த்து, தயவுடன் கிளிகள் சொல்லின: நாங்கள் மூக்குகளால் கூடுகளை

निर्माय, तेषु सुखं आस्महे। यूयं हस्त-पाद-सहिता अपि,
கட்டி, அவைகளில் ஸுகமாக இருக்கிறோம். நீங்கள் கை கால் கூடினவர் ஆயினும்,

किं आवासहीनाः पीड्यध्वे" इति। एतत् श्रुत्वा, "अस्मान्
என் வீடில்லாதவர்களாக கஷ்டப்படுகிறீர்கள்" என்று. இதைக் கேட்டு, "நம்மை

एते परिहसन्ति" इति मर्कटाः अकुप्यन्। अथ शुकान्
இவைகள் கேலி செய்கின்றன" என்று குரங்குகள் கோபித்துக் கொண்டன. பிறகு கிளிகளைக்

हत्वा कुलायान् च अधः पातयामासुः॥
கொன்றுவிட்டு கூடுகளை யும் கீழே விழச்செய்தன.

---

# 15. मुग्धः कृषीवलः ।

## முட்டாளான குடியானவன்.

---

कश्चित् ग्रामीणः कृषीवलः कदाचित् (भृष्टान् तिलान्)
ஒரு நாட்டுப்புறத்துக் குடியானவன் ஒரு ஸமயம் வறுத்த எள்ளுகளை

भुङ्क्त्वा, स्वादून् अवेत्य मनसि एवं अचिन्तयत् :
சாப்பிட்டுவிட்டு, ருசியுள்ளவைகளென அறிந்து மனதில் இவ்வாறு எண்ணிக்கொண்டான்:

"अस्मत् क्षेत्रे (समुद्यमानाः तिलाः) एवं स्वादवः (न भवन्ति)।
"என் வயலில் உண்டாகிற எள்ளுகள் இந்தமாதிரி ருசியுள்ள வைகளாக ஆகிறதில்லை.

तत्, इतःपरं अभृष्ट-तिलाः (न वप्तव्याः)। किंतु (भृष्टा एव)
ஆகையால், இனிமேல் வறுக்காத எள்ளுகள் விதைக்கத் தகுந்தவைகள் அல்ல. ஆனால் வறுத்தவைகள் தான்

वप्तव्याः । तथा (कृता चेत्), ईदृशा स्वादवः तिलाः
விதைக்கத் தகுந்தவைகள். அவ்வாறு செய்யப்பட்டால், இவ்வாறு ருசியுள்ளவைகளாக எள்ளுகள்

समुत्पद्येरन्" इति । एवं विचिन्त्य भृष्ट-तिलोत्पत्तीच्छया (भृष्ट +
உண்டாகும்" என்று. இவ்வாறு எண்ணி வறுத்த

तिल + उत्पत्ति + इच्छया) सः भूरि तिलान् भृष्टाऽभृष्टान् एव
எள்ளு உண்டாக்குவதில் பிரியத்தால் அவன் அதிக எள்ளுகளை வறுத்ததும் வறுக்காததுமாகவே

तान् भूमौ अवपत् । (भृष्टाः तिलाः) कथं प्ररोहेयुः ? ते
அவைகளை பூமியில் விதைத்தான். வறுத்த எள்ளுகள் எப்படி முளைக்கும் ? அவைகள்

(न प्रारुक्षन्) । तस्य तिल-नाश परं अजायत ।
முளைக்கவே இல்லை. அவனுக்கு எள்ளு நஷ்டம் அதிகம் உண்டாயிற்று.

अतः अति-लोभः (न कर्तव्यः) । लोभं च (न परित्यजेत्) ।
ஆகையால் பேராசை பாராட்டத்தகுந்ததல்ல. [செய்யத்தகுந்ததல்ல.] ஆசையையும் [ஆனால்] விட்டு விடாதே.

अति-लोभ-अभिभूतस्य करस्थं अपि नश्यति ॥
பேராசையால் தாக்கப்பட்டவனுக்கு, கையிலுள்ளதும் சேதமாய்ப் போய்விடுகிறது.

---

# 16. शकुन्तला - परिणयम् ।

சகுந்தலா – விவாகம்.

---

पुरा किल दुष्यन्तः नाम चन्द्रवंशीयः राजा बभूव ।

முன் காலத்தில் துஷ்யந்தன் என்று பெயருள்ள சந்திரகுலத்திற்பிறந்த அரசன் ஒருவன் இருந்தான்.

स च एकदा मृगयां कर्तुं ससैनिकः हिमवत्-प्रान्त-कान्तारं

அவனும் ஒரு நாள் வேட்டை செய்ய பட்டாளங்களுடன் ஹிமயமலைக்கு ஸமீபமான காட்டை

जगाम । तत्र (बहून् मृगान्) जघान । तदा सैनिकान्

அடைந்தான். அவ்விடத்தில் அநேக ஜந்துக்களைக் கொன்றான். அப்படி பட்டாளக்காரர்களை

त्यक्त्वा, पलायमानं एकं हरिणं अन्वधावत् । मार्गे कण्वस्य

விட்டுவிட்டு, ஓடுகிற ஒரு மானைப் பின் தொடர்ந்து ஓடினான். வழியில் கண்வருஷியினுடைய

(दिव्यं आश्रमं) दृष्ट्वा, तत्र प्रविवेश । (तस्मिन् आश्रमे)

அழகிய ஆச்ரமத்தைக் கண்டு, அதற்குள் ப்ரவேசித்தான். அந்த ஆச்ரமத்தில்

कण्वस्य (कृतिकां दुहितरं शकुन्तलां) अनसूया, प्रियंवदा इति

கண்வருடைய தத்து குமாரியான சகுந்தலையை அநஸூயா, ப்ரியம்வதா என்னும்

सखीभ्यां क्रीडन्तीं अपश्यत् । ततः सा मेनकायाः नाम

தோழிகளுடன் விளையாடுகிறதைப் பார்த்தான். பிறகு அவள் மேனகா என பெயரான

अप्सरसः दुहिता इति (विज्ञापितः सन्) तस्यां अनुरागं

அப்ஸரஸின் பெண் என்று தெரியப்படுத்தப்பட்டவனாக அவளிடத்தில் நேசத்தைக்

बबन्ध । तां (गान्धर्वेण विधिना) परिणीतवान् च ।

கட்டுப்படுத்தினான். அவளை காந்தர்வ சட்டப்படி கல்யாணம்செய்துகொண்டவனாகவும் ஆனான்.

तया सह तस्मिन् आश्रमे कञ्चित् कालं अरमत ॥

அவளோடு கூட அந்த ஆச்ரமத்தில் சில காலம் ஸுகித்தான்.

॥ समाप्ता चेयं संस्कृत-तामिलमञ्जरी ॥

---

## பிழை திருத்தங்கள்.

---

[குறிப்பு :—இந்தப் புஸ்தகத்தைப் படிக்க ஆரம்பிக்குமுன் அடியிற் கண்டிருக்கும் பிழைகளைத் திருத்திக்கொள்ளவும்.]

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| xiv | 5 | अहं देवं तुष्यामि | अहं तुष्यामि |
| ,, | ,, | அஹம் தேவம் துஷ்யாமி | அஹம் துஷ்யாமி |
| ,, | ,, | நான் கடவுளை சந்தோஷப் படுத்துகிறேன். | நான் சந்தோஷப்படுகிறேன். |
| ,, | 21 | वापीभ्य | वापीभ्यः |
| xvi | 8 | अवन्त्यं | अवन्त्यां |
| ,, | 26 | आचरेताम् | आचरेतम् |
| ,, | 28 | அறிந்தாய் | அறிவாய் |
| xvii | 4 | पाणीं | पाणी |
| ,, | 13 | दृष्टास्मि | द्रष्टास्मि |
| ,, | 14 | दृष्टास्वः | द्रष्टास्वः |
| ,, | 15 | दृष्टास्मः | द्रष्टास्मः |
| xix | 6 | युवं | युवां |
| ,, | 22 | गा | गाः |
| xx | 18 | व्यहसध्वम् | अलज्जध्वम् |
| ,, | ,, | சிரித்தீர்கள் | வெட்கப்பட்டீர்கள். |
| xxi | 6 | श्रूयन्तां | कथयन्ताम् |
| ,, | 7 | கேட்கட்டும் | சொல்லட்டும் |
| ,, | 15 | प्रीणयेयातां | प्रीणयेयाताम् |
| ,, | 23 | अतिवृष्टी | अतिवृष्टीः |
| xxii | 3 | शाखादीन् | शाकादीन् |
| xxiii | 4 | अमृष्यामहि | क्लेशं अलप्स्यामहि |
| ,, | ,, | செத்துப்போய்விடுவோம் | வருத்தத்தை அடைவோம். |
| ,, | 10 | आनेष्यध्वं | आनेष्यध्वम् |
| ,, | 14 | अपत्स्येतां | अपत्स्यताम् |
| xxv | 5 | ब्राह्मणेभ्य | ब्राह्मणेभ्यः |
| ,, | 22 | दरी दृश्यते | दरीदृश्यते |
| 1 | 10 | प्रभावम् | प्रभावः |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 9 | अक्षालयन् | क्षालयन् |
| 4 | 9 | विंशति | विंशतिं |
| 5 | 17 | भयोद्विग्नमना | भयोद्विग्नमनाः |
| 6 | 15 | रक्तासिक्ताङ्गं | रक्तसिक्ताङ्गः |
| 7 | 13 | अनेतुं | आनेतुं |
| 7 | 21 | भुञ्जने | भञ्जने |
| 10 | 5 | कस्यचित् | कस्यचित् |
| ,, | 11 | अस्य | अस्य |
| ,, | 25 | महत्फलं | महत् फलं |
| ,, | 27 | स | सः |
| ,, | ,, | स | सः |
| 12 | 5 | अपरद्धं | अपराद्धं |
| ,, | 11 | सञ्जात-भय | सञ्जातभयः |
| 13 | 5 | सुरभि | सुरभिः |
| ,, | 19 | आह : | आह :— |
| ,, | 23 | तुष्टास्मि | तुष्टा अस्मि |
| 14 | 1 | तुष्टा | तुष्टा |
| 15 | 5 | भुङ्क्त्वा | भुक्त्वा |
| ,, | 19 | तिलनाश | तिलनाशः |
| ,, | 22 | விடாதே | விடக்கூடாது |
| 16 | 8 | அப்படி | அப்பொழுது |
| ,, | 11 | दृष्टा | दृष्ट्वा |